# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 31வது கூட்டறிக்கை 2020.09.14

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 31வது அமர்வு 2020.09.14 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 04. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 02. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 03. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 31வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் முஸ்தபா, கௌரவ உறுப்பினர் அஸ்பர், கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் இன்றைய சபை அமர்விற்கு வருகை தர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

கூட்டறிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் அமர்வில் உங்களின் வேண்டுகோளுக்கு அமைவாக சபையின் நிர்வாக அதிகாரிகள் இன்று பார்வையாளர் பகுதியில் அமர்ந்து இருக்கின்றார்கள். அவர்களை இந்த சபையில் கௌரவ உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை ஆக்கபூர்வமான முறையில் உள்வாங்கி அவர்களின் ஆதங்கங்களை விளங்கி செயற்படும் விதத்தில் அக் கருத்துகளை உள்வாங்குமாறு கேட்டவனாக, நான் சென்ற சபையில் ஒரு கௌரவ உறுப்பினராக தெரிவித்த கருத்தை தொடர்ந்து இந்த சபையின் காவலர்கள் நாம். நீங்கள் எல்லோரும் ஒருமித்து தரும் அதிகாரத்தினால் செயற்படுபவர்தான் கௌரவ தவிசாளர். இந்த சபை முடிவுகள் எடுக்கும் போது, அந்த முடிவுகளை செயற்படுத்தும் பொறுப்பு அரச உத்தியோகத்தர்களுக்கு ஆகும். அரச உத்தியோகத்தர்கள் அதை உரிய முறையில் செயற்படுத்தாவிட்டால் அதற்கு வகை கூற வேண்டியவர்கள் அவர்கள். நாம் சபையில் எந்தத் தீர்மானம் எடுத்தாலும் அந்தத் தீர்மானம் பிரதேச சபை சட்டத்திற்கு உட்பட்டதா? அதை எந்த முறையில் செயற்படுத்த வேண்டும் என்று நமக்கு வழிகாட்ட வேண்டியவர்கள், நமக்கு அறிவுரை வழங்க வேண்டியவர்கள் இந்த சபையில் இருக்கும் அரச ஊழியர்கள். அது சரியென செயற்படுத்தப்படாவிட்டால் நிச்சயமாக அது ஒரு நிர்வாக பிரச்சினையாக மாறும்.

அதற்காகத்தான் சென்ற அமர்வில் தெரு விளக்குகள் பற்றிய பிரேரணை கௌரவ தவிசாளரினால் முன்வைக்கப்படும் போது நான் ஒரு கௌரவ உறுப்பினராக சில அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தேன். ஆனால் துரதிஸ்டவசமாக அந்த அறிவுறுத்தல்கள் உள்வாங்கப்படாமல் அக் கொள்வனவுகளில் சில குறைபாடுகள் இன்று நிர்வாக ரீதியில் எழுந்து இருக்கின்றது. இதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அந்த கொள்வனவை அந்த முறையில் செய்த உத்தியோகத்தர்கள். ஏனென்றால் பொதுப் பாதைகளில் இருக்கும் விளக்குகளை அகற்றி புது LED விளக்குகளை போடுவதாக நாம் முடிவு எடுத்தோம். அது ஒரு பொதுவான முடிவு. அந்த தீர்மானம் எடுக்கப்பட்டதும் அது சரியான முறையில் ஒரு முழுமையான தீர்மானம் வருவது என்றால் அது தொகை குறிப்பிடப்பட்டு, அது நியாயப்படுத்தப்பட்டு வந்திருந்தால் அதன் பின் இருக்கும் கொள்வனவுகளுக்குரிய Tender Procedure. ஆனால் அது இல்லாமல் ஒரு பொது முடிவு ஒன்று எடுக்கப்படும் போது முதல் நாங்கள் என்ன கொள்வனவு செய்யப்போகின்றோம், எவ்வளவு செய்யப்போகின்றோம் அதன் நியாயப்படுத்தல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதன் பின் அந்த கொள்வனவுக்குரிய செயற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

ஒரு விலைமனு கோருவது என்று சொன்னால் அதற்கு ஒரு விதிமுறை இருக்கின்றது. அது சரியாக செயற்படுத்தப்படவில்லை என்று இன்று எனக்கு செயலாளர் தந்த விளக்கத்தில் அதில் குழர்படிகள் இருக்கின்றது என்று எனக்கு வெளிப்படையாக தோன்றுகின்றது. அதற்குரிய நிர்வாக நடவடிக்கைகளை செய்ய வேண்டிய பொறுப்பு உங்களின் தவிசாளர் என்ற ரீதியில் எனக்கு இருக்கின்றது. இனிமேலும் ஊழியர்கள் அந்த செயற்பாடுகளை செய்யும் போது உரிய நடவடிக்கைகளை செய்ய வேண்டும். ஏனென்றால் இதில் பல முறைப்பாடுகள் வந்திருக்கின்றது. சென்ற முறை சபைக்கு LED மின்விளக்குகளை Supply பண்ணியவருடன் இம் முறை விலை மனு கோரப்படவில்லை. அது ஒரு நிர்வாகப் பிழை. ஏனென்றால் அவர் சென்றமுறை சபைக்கு பொருட்களை தந்திருந்தால் அதில் குறைபாடுகள் இல்லாவிட்டால் நிச்சயமாக அடுத்த முறையும் அவர் ஒரு Registered Supplier ஆக இருக்கும் போது அவரிடமும் அது பெறப்பட்டிருக்க வேண்டும். அது ஏன் பெறப்படவில்லை? அந்த தரம் பார்க்கப்பட்டதா என்ற கேள்விகளுக்கு கௌரவ உறுப்பினர்கள் பதில் தர இயலாது. ஏனென்றால் நாம் நிபுணர்களும் அல்ல, அந்த நடைமுறையில் பங்காளிகளும் இல்லை. Purchasing கௌரவ உறுப்பினர்கள் செய்வதில்லை. அதை செய்ய வேண்டிய கடமை உத்தியோகத்தர்களுக்கு, அதில் இருக்கும் நிர்வாக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களும் அவர்கள்.

நான் சென்ற சபையில் எனது உரையில் கூறியிருந்தேன். சபையின் வருமானம் போதியளவு எட்டப்படாத நிலையில் ஒரு அத்தியவசிய அல்லது ஒரு அவசரமான விடயத்தை தவிர வேறு விடயங்களுக்கு நாம் ஒதுக்கப்பட்ட தொகையின் முழுத் தொகையையும் நாம் பாவிப்போமானால் அதற்கு நிச்சயமாக ஒரு நியாயப்படுத்தல் இருக்க வேண்டும். உதாரணத்திற்கு மின் விளக்குகள் பராமரிப்புக்கு நாம் ஒரு தொகையை ஒதுக்கி அதில் பழுதாகின்ற விளக்குகளை திருத்துவதற்காக அல்லது இல்லாத இடங்களுக்கு விளக்குகளை பொருத்துவதற்காக 50% நாம் ஏற்கனவே செலவளித்து இருந்தால், வருமானம் 30% தான் இருப்பது என்றால் மிகுதி 50% செலவளிப்பதில் ஒரு நியாயப்படுத்தல் இருக்க வேண்டும். ஒரு பகுதிக்கு விளக்குகள் இல்லாமல் இருந்தால் அல்லது இருக்கின்ற விளக்குகள் செயல் இல்லாமல் இருக்கும் போது நிச்சயமாக நாம் அதை நியாயப்படுத்தலாம். நியாயப்படுத்தலில் ஒரு Audit பிரச்சினை வருவதற்குரிய சூழலை நாம் உருவாக்குகின்றோம் என்று கூறி,

நாம் சபையின் தீர்மானப்படி கௌரவ பிரதித் தவிசாளரின் மேற்பார்வையில் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் நாம் நமது எலும்பு அரைக்கும் ஆலை, சென்னல் கிராமம் சந்தை, சென்னல் கிராமம் நூலகம், Garment Factory , மல்வத்தை வளாகத்திலும், உப அலுவலகத்திலும் பயிர் செய்திருந்தோம். ஆனால் இன்று வரட்சி காரணமாகவும் அது சரியாக மேற்பார்வை செய்யப்படாததன் காரணமாகவும் Factory வளவை தவிர மற்ற இடங்களில் அந்தப் பயிர் முற்றாக அழிந்து இருக்கின்றது. அதில் எனக்கு மிகவும் வருத்தமான செயல் என்னவென்றால் எலும்பு அரைக்கும் ஆலை வளாகத்திலும், சென்னல் கிராம சந்தையிலும் மேற்பார்வையாளர்கள் இல்லாமல் இருந்த போதும் சென்னல் கிராம நூலகத்தில் 02 ஊழியர்கள் இருந்தும் சகல பயிர்களும் அழிந்த நிலையில் உள்ளது. அவர்கள் ஒவ்வொருநாளும் Gate இனை அடைத்து, கௌரவ உப தவிசாளர் அவர்கள் அதைச் சுற்றி வலைகூட கட்டி இருந்தும் அதை பாதுகாக்க முடியாத ஒரு நிலையில் இருந்தால் அவர்கள் அக் கடமையை சரியாக செய்தார்களா என்ற ஒரு கேள்வி எழும்பி இருக்கின்றது. அதற்கு அவர்களின் விளக்கங்கள் கோரப்பட்டு இருக்கின்றது. தற்போது எமக்கு எஞ்சி இருக்கின்ற Factory வளாகத்திற்குள் இருந்த பயிர் இந்தக் கிழமை முடிவில் நாம் அறுவடை செய்யக்கூடிய வகையில் இருக்கும் என்று நினைக்கின்றேன்.

இந்த நாட்டில் தேர்தல் காலங்களுக்கு முதல் தொல்பொருள் ஆராய்ச்சிகளைப் பற்றி கிழக்கு மாகாணத்திற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் தற்போது பாதுகாக்கப்பட்ட, பேணப்பட்டுள்ள பகுதிகளில் 09 இடங்கள் இருக்கின்றது. அதில் வளத்தாப்பிட்டி – 1 இல் 06 இடங்களும், மல்வத்தை – 03 இல் ஒரு இடமும், மல்வத்தை – 01 இல் 02 இடமும், வளத்தாப்பிட்டி – 01 இல் பளவெளி, வளத்தாப்பிட்டி வில்லொலவவும், பளவெளி இல் 02 இடங்களும் பழைய வளத்தாப்பிட்டியிலும் 02 இடங்கள் ஆகும். மல்வத்தை – 03 இல் சடையந்தலாவ காட்டப்பட்டிருக்கின்றது. அரச விதைகள் உட்பட பண்ணைக்கு சொந்தமான பூமியில் உள்ள கற்துளை அடையாளங்கள் உள்ள இடமும், பழமையான செங்கற்கள் பரவிய கற்தரையும், மல்வத்தை – 01 இல் திருவள்ளுவர்புரம் தொல்பொருள் தடையங்களுடனான கற்தரை, திருவள்ளுவர்புரம் கற்தூண்கள், கல்வெட்கள், மட்பாண்டங்களின் துண்டுகள், ஓடு மற்றும் செங்கல் தடையங்கள் உடைய குடியேற்றங்கள் என்பனவாகும்.

பேணப்படவேண்டிய தொல்பொருள் பிரதேசங்கள் என்ற தலைப்பின் கீழ் வளத்தாப்பிட்டி – 01 இல் 02 இடங்களும், மல்வத்தை – 01 இல் 03 இடங்களும், மல்வத்தை – 02 இல் ஒரு இடமும், மல்வத்தை – 03 இல் ஒரு இடமும், மல்வத்தை – 04 இல் 04 இடங்களும் ஆகும். இதை ஏன் நான் உங்களுக்கு அறிவிக்கின்றேன் என்று சொன்னால், மக்கள் பிரதிநிதிகளாக நாம் இருக்கும் போது பிரதேச சபைக்கோ, பிரதேச செயலகத்திற்கோ எந்த அறிவித்தலும் இல்லாமல் இராணுவ அதிகாரிகளோ, தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு உத்தியோகத்தர்களோ நமது பகுதிகளில் ஊடுருவி இந்த செயற்பாடுகளில் ஈடுபடுவது, மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்குவது அதற்கு அப்பால் இந்த பிரதேசத்தில் நாம் சமாதானத்துடனும் மக்கள் மத்தியில் ஒரு பரஸ்பர நம்பிக்கையோடு வாழும் பிரதேசத்தில் பிரச்சினைகளை உருவாக்கக்கூடிய

செயற்பாடுகளாக இவைகள் கருதப்படலாம். அதனால் இச் சபை ஒரு தீர்மானத்தை எடுத்து இந்த சபை எல்லைக்குள் ஏதாவது செயற்பாடுகள் செய்வது என்றால் இந்த சபைக்கும், பிரதேச செயலகத்திற்கும் அறிவித்த பின் செயற்படுத்த வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்திற்கும் அத்தோடு பிரதிகள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் அதற்கு பொறுப்பான புத்த சாசன அமைச்சராக இருக்கும் பிரதம மந்திரி அவர்களுக்கும் அனுப்புவதற்கு இந்த சபையின் அனுமதியை கோருகின்றேன். ஏனென்றால் நிச்சயமாக அந்த அறிவித்தல் இருக்கவே வேண்டும் இல்லாவிட்டால் நாம் மக்களுக்கு பதில் கூற முடியாது. நிச்சயமாக தொல்பொருள் இருக்கும் இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதனை பாதுகாப்பதனால் இன்று அங்கு வாழும் மக்கள் வெளியேற்றப்பட்டோ அல்லது வேறு அழுத்தங்களுக்கு உள் வாங்கப்படுவார்களானால் அதற்கு முகங்கொடுக்க வேண்டியவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் நாம்.

**தீர்மானம் - 04/31/01**

பிரதேச சபை எல்லைக்குள் தொல்பொருள் ஆராய்ச்சி தொடர்பான செயற்பாடுகளை செய்வது என்றால் எமது சபைக்கும், பிரதேச செயலகத்திற்கும் அறிவித்த பின்னர் செயற்படுத்துவது தொடர்பாக தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

2020.09.10 ஆந் திகதி 2192/36 என்ற Gazette வெளியிடப்பட்டிருக்கின்றது. அதில் ஆவணங்கள் எதுவும் இன்றி அரச காணிகள் அபிவிருத்தி செய்து அல்லது குடியிருக்கும் மக்களுக்கு சட்ட ரீதியான ஆவணங்கள் வழங்குவதனை துரிதப்படுத்துதல் என்ற ஒரு Gazette வந்திருக்கின்றது. அதில் ஒரு விண்ணப்பப்டிவமும் இருக்கின்றது. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் காலம் 2020.09.30 ஆந் திகதி ஆகும். இது காணி ஆணையாளர் வெளியிட்டிருக்கின்றார். உங்களது வட்டாரங்களில் உங்களுக்கு தெரிந்தவர்கள் இப்படியான நிலையில் இருப்பார்களானால் நிச்சயமாக விண்ணப்பம் 30 ஆந் திகதிக்குள் செய்ய வேண்டும். அப்படி செய்யாவிட்டால் அதற்கு பின்னர் எதுவும் செய்ய இயலாமல் இருக்கும். அதற்காகத்தான் நான் இதை சபையில் அறிவுறுத்தல் கூறுகின்றேன். சட்ட ரீதியான ஆவணங்கள் இல்லாது அரச காணியை அபிவிருத்தி செய்துள்ள நபர்களுக்கு சட்ட ரீதியான ஆவணங்கள் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவம் உங்களுக்கு தேவைப்பட்டால் எடுக்கலாம். ஆனால் இதை உங்களது மக்களுக்கு அறிவித்து இதில் இருப்பவர்களை அவர்களின் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக தொடர்பு கொண்டு இந்த செயற்பாட்டை 30 ஆந் திகதிக்கு முதல் செய்வதற்கு நீங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

எமது வைத்தியசாலையில் அண்மையில் Eye Specialist வந்திருக்கின்றார். அது பெரிய ஒரு பாக்கியம் ஆகும். ஆனால் வைத்தியசாலையில் அதற்குரிய உபகரணங்கள் முழுமையாக இல்லை. அவர்களின் முயற்சியினால் நம்பிக்கையாளர் சபையின் தலைமையில் மஜ்லிஸ் அஸ்ஷூராவின் வழிகாட்டலில் இந்த ஊரில் வாழும் சகல இன மக்களையும் ஒன்று சேர்த்து கோயில் தர்மகத்தாக்களுடனும், நிர்வாகத்துடனும் பேசி அந்த நிபுணருக்கு அக் கடமையை செய்யக்கூடிய வகையில் அரசாங்க உதவியையும் நாடி அதற்கு மேலாக மக்களின் பங்களிப்போடு நிதியை திரட்டி அதற்கு நம்பிக்கையாளர் சபையும் முடிவெடுத்து அவ் அமர்வுக்கு என்னையும் அழைத்தார்கள். அந்த நிதி சேர்க்கும் செயற்பாட்டில் உங்களின் தவிசாளராகிய நான் எனது தனிப்பட்ட முறையில் முதன் முதல் முதலீட்டை செய்து அதை ஆரம்பித்து வைத்திருக்கின்றேன். நீங்கள் எல்லோரும் உங்கள் பகுதிகளில் வாழும் அம் முயற்சிக்கு உதவக்கூடிய தனவந்தர்கள், பொதுநல விரும்பிகள் ஏனென்றால் நமது பகுதிகளில் Diabetes பெரிய ஒரு சவால் தற்போது எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் Cataract Operation செய்வதற்கு தேவைப்படும். அதை

வெளியில் செய்வது என்றால் பாரிய செலவு ஆகும். அதை பங்களித்து கொள்வனவு செய்து விட்டால் ஏழை மக்களுக்கு பெரிய உதவியாக இருக்கும். அதனால் உங்களின் ஒத்தாசைகள் இருக்க வேண்டும். சபை என்ற ரீதியில் நாம் நமது மாகாண ஆளுநருக்கும், தேசிய சுகாதார அமைச்சருக்கும் இந்த முயற்சியில் நமது பங்களிப்பை பிரதேச சபை என்ற ரீதியில் பண ரீதியாக உதவ முடியாவிட்டாலும் நிருவாக ரீதியில் நாம் முடிவு எடுத்ததாக நிதி உதவுவதற்கு அவர்களின் ஆதரவை நாடி நிற்கின்றோம் என்ற அறிவித்தலை அவர்களுக்கு வழங்கி அதை செய்ய உங்களின் ஒத்தாசையை நாடுகின்றேன். உங்கள் எல்லோருக்கும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் என்ற ரீதியில் உங்களுக்கு தரப்பட்டிருக்கும் படிவத்தை உரிய காலத்தில் பூரணப்படுத்தி வேறாக Envelop இல் இட்டு சீல் பண்ணி செயலாளரிடம் பாரம் கொடுக்கலாம். சீல் பண்ணி கொடுக்கின்ற போது அது இரகசியமாக இருக்கும். இதனை பூரணப்படுத்தி கொடுக்காவிட்டால் கொடுப்பனவை நிறுத்துவார்கள். எனவே அதனை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டு,

செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம்.

வருமானத்தில் தற்போது வரிகள் 21% இனை அடைந்திருக்கின்றோம். 08 மாதங்கள் முடிவில் வாடகை 31%, Licence 44%, நாம் அளிக்கும் சேவைகளுக்கான கட்டணம் 54% ஆனால் முத்திரை வரியிலும் நமது நீதிமன்ற தண்டப் பணம் இரண்டும் 75% இற்கு மேல் ஆகும். முத்திரைக் கட்டணம் நாம் 14 மில்லியன் Estimate பண்ணினோம். 10.7 மில்லியன் கிடைக்கப்பெற்றுள்ளது. Courts Fine 79%, Other Revenue 12% ஆகும். சராசரியாக நாம் Budget பண்ணின வருமானத்தில் 42% தான் நாம் அடைந்திருக்கின்றோம். இருப்பது 04 மாதங்கள். நாம் இந்த வருடத்திற்கு முழுமையாக செலவளிப்பதற்கு உத்தேசித்துள்ள தொகையை செலவளிப்பதானால் இந்த 03 மாதத்திற்குள் வருமான பெறுபேறுகளை பெற வேண்டி இருக்கும். இதற்கு உரிய நடவடிக்கைகளை செயலாளர் எழுத்து மூலம் உரியவர்களுக்கு அறிவித்து அதை அடுத்த அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும் என்று உங்கள் சார்பில் கட்டளை இடுகின்றேன். ஏனென்றால் வருடம் முடிந்ததும் Audit Query வரும். அதில் நாம் இப்படி செய்யப்போகின்றோம், அப்படி செய்யப்போகின்றோம் என்று எழுதுவோம். அத்தோடு அது முடியும் ஆனால் நடவடிக்கை முடியாது. நாம் எதிர்பார்க்காத விதத்தில் கொவிட் 19 எமது எல்லா திட்டங்களையும் உலகம் பூராகவும் பாரிய ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆனால் அதில் இருந்து வெளிவருவது என்றால் மக்கள் பங்களிப்பு இல்லாமல் செயற்படுத்த முடியாது. அதனால் மக்கள் பங்களிப்பு என்று சொல்லும் போது நாமும் மக்களை ஊக்குவித்து அவர்களின் வரிகளை கட்ட வைத்து நாம் நமது வருமானத்தை எப்படி சீர்படுத்தி எமது இலக்குகளை அடையலாம் என்ற ஒரு நிலமை இருக்கின்றது. அதனால் அதில் உங்கள் எல்லோரின் பங்களிப்பையும் நான் எதிர்பார்க்கின்றேன்.

**தீர்மானம் - 04/31/02**

சென்ற மாதம் 2020.08.01 தொடக்கம் 2020.08.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இறைச்சிக்கடை மற்றும் திறந்தவெளி சந்தை 2021 ஆம் ஆண்டிற்கான குத்தகை கோரல், இந்த மாத இறுதியில் விலைமனு கோர வேண்டும். இறைச்சிக் கடைகளை கூட்டுவதனால் நமது வருமானத்தை அல்லது வருமானத்தை அப்படியோ வைத்திருந்தாலும் இறைச்சியின் விலைகளை குறைக்கலாம். அதில் 04 இடங்கள் இனங்காணப்பட்டு குறிக்கப்பட்டிருக்கின்றன. அதை விட வேறு

இடங்களில் இதை கூட்ட வேண்டுமா? அல்லது குறைக்க வேண்டுமா? என்ற முடிவை நீங்கள் எடுக்க வேண்டும். இதில் கௌரவ உறுப்பினர்களின் கருத்தை உள்வாங்க நினைக்கின்றேன் உங்களின் கருத்துக்களை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இறைச்சிக்கடை தொடர்பாக இதை கூட்டினால்தான் இறைச்சியின் விலையையும் குறைத்து மக்களுக்கும் சௌகரியமான நிலையை ஏற்படுத்தலாம். அல் அர்ஷத் பாடசாலை பிரதேசத்திலும் அமைக்க வேண்டும் என்றும் தைக்காப்பள்ளி, கைகாட்டிச் சந்தி போன்ற இடங்களிலும் இறைச்சிக் கடைகளை அமைத்து இவ் இடங்களை கூட்டுவது என்பதுதான் எனது கருத்து என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அல் அர்ஷத் பாடசாலை பிரதேசத்திற்கு நேராக கொச்சிக்காய்தூளர் சந்தியிலும் ஒரு கடை இருக்கின்றது. அவைகளையும் யோசிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாய்க்குட்டியர் சந்தி பொருத்தம் இல்லாத இடம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஏன் அது பொருத்தம் இல்லாத இடம்?

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல் அவர்கள்:**
பொதுவான ஒரு இடம் இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் இடத்தை இனங்கண்டால் நாம் GS இடமும் கேட்கலாம். நாய்க்குட்டியர் சந்தி என்பது அந்த சந்தியில் இல்லை. அப் பகுதி மக்களுக்கு இறைச்சிக்கடைக்குரிய வசதி செய்வது என்றால் இருக்கின்ற கட்டடம் ஒன்றை வாடகைக்கு எடுக்கலாம். இல்லாவிட்டால் அதற்கு பொருத்தமான இடத்தை தேடித்தந்தால் அவ்விடத்தில் அமைக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மஜீட்புர கிராமத்திலும் ஒரு இறைச்சிக் கடையை நிறுவினால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மஜீட்புரத்தில் இறைச்சிக்கடை இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஆனால் தற்போது நடைமுறையில் இல்லை என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது நடைமுறையில் உள்ளது. தற்போது 12 கடைகள் இயங்குகின்றது.

### தீர்மானம் - 04/31/03
இறைச்சிக் கடைகள் மற்றும் திறந்த வெளிச் சந்தை என்பவற்றினை 2021 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு விடல் மற்றும் கீழ்வரும் இடங்களில் புதிதாக இறைச்சிக் கடைகள் திறப்பதற்கான பிரேரணை.

1. தக்கியாப் பள்ளியடி
2. நாய்க் குட்டியர் சந்தி
3. கண்டியர் கடை – தைக்காப்பள்ளி வீதி பிரதேசம்
4. ஹிஜ்றா புர சந்தைக் கடை – கொச்சிக்காய்த் தூளர் சந்தி
5. அல் அர்ஷத் பாடசலை பிரதேசம்
6. கைகாட்டிச் சந்தி

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அரசாங்கத்தின் ஒரு இலட்ச வேலை வாய்ப்புகள் வழங்கும் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் வழங்குவதற்கான வசதிகளை வழங்குதல் தொடர்பாக, அரசாங்கம் பிரதேச செயலகம் மூலம் அப்துல் மஜீட் மண்டபத்தினையும், ஜனாதிபதி கட்டடத் தொகுதியையும் 250 பயிலுனர்களுக்கும் ஏனைய ஒரு இலட்ச வேலை வாய்புக்குரியவர்களுக்கும் பாவிப்பதற்காக பொது இடங்கள் இல்லை என்று கேட்டிருக்கின்றார்கள். இன்று வரை நாங்கள் அதை நாம் வாடகைக்கு விடாத நாட்களில் அவர்களுக்கு பாவிப்பதற்கு அனுமதி வழங்கி இருக்கின்றோம். ஆனால் அதை ஒரு மாத காலத்திற்கு கொடுப்பதானால் நிச்சயமாக சபையின் அங்கீகாரம் தேவை. அதுமட்டுமல்ல வருமானக் குறைவு என்றால் அமைச்சருக்கும் அறிவிக்கவேண்டி வரும். நமக்கு ஒரு மாதத்தில் 10 நாள் என்றால் ரூபா 150000.00 வருமானம் இல்லாமல் போகும். ஆனால் இப் பயிலுனர்கள் எமது பிரதேசத்தை சேர்ந்தவர்கள் அதனால் இதை சபையின் அங்கீகாரத்தோடு எப்படி வழங்குவது என்பதற்கான உங்களின் மாற்றுக் கருத்துக்கள் இருக்குமானால் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது எங்களது பிரதேசத்தில் வாழும் மக்களுக்குரிய பயிற்சிப்பட்டறைதான். ஆனால் நாங்கள் அப்துல் மஜீட் மண்டபத்தை வழங்குவதன் ஊடாக எங்களுடைய வருமானத்தில் இடையூறுகள் ஏற்படலாம். எங்களுடைய Function நடக்கின்ற போது அவர்கள் வேறு இடத்திற்கு செல்வார்கள் என்ற கருத்தை வெளியிட்டாலும் அவர்களுக்கு நிர்வாகப் பிரச்சினைகள் ஏற்படும். சில நேரம் முதல் நாளைக்கு பயிற்சிக்குரிய ஒருவர் வராவிட்டால் அடுத்த நாள் எங்களுடைய பிரதேச சபையின் ஒரு Function நடந்தால் அந் நபர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். மீண்டும் அவர்கள் வந்து அலைந்து திரிகின்ற நிலமை ஏற்படும். ஆகவே நிர்வாகப் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு அவர்களுக்கு அப்துல் மஜீட் மண்டபத்தை கொடுக்கலாமா, இல்லையா என்பதை பரிசீலனை செய்துவிட்டு அதை கொடுக்கலாம் என்று நினைக்கின்றேன். ஆனால் ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை முழுமையாக கொடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திறந்த வெளிச் சந்தை நமக்கு ஏறத்தாள 70 இலட்சம் வருமானம் தருவது. அதில் கொவிட் 19 இனால் மார்ச் மாதத்தில் இருந்து ஏறத்தாள ஜூலை முடிவு வரை ஊரடங்கு, சுகாதார விதிமுறைகளினால் பாரிய பின்னடைவு அடைந்தது. அதை வைத்துக் கொண்டு இந்த முறை திறந்த வெளி குத்தகைக்கு எடுத்தவர் சென்றவருடமும் அவர்தான் குத்தகைக்காரராக இருந்தவர். சபைக்கு கொடுக்க வேண்டிய குத்தகை தொகையை முழுமையாக செலுத்தியவர். அவர் சலுகை என்று கூறாமல் இந்த வருடத்திற்கு எடுத்த 7 மில்லியன் 50500/- என்ற தொகைக்கே 2021 ஆம் ஆண்டும் தர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்திருக்கின்றார். இம் முடிவை நாம் மட்டும் எடுக்க முடியாது ஆனால் சபை தீர்மானத்தோடு ஆளுநருக்கு ஒரு விதி விலக்காக எழுதி இதில் வருமானக் குறைவு இல்லை. அடுத்த முறை விலைமனு கோருகின்ற போது இந்த வருடம் எடுத்த

தொகையை மையமாக வைத்துதான் நாம் Tender Call பண்ற அதற்கு குறைவாக ஒருவரும் கேட்க இயலாத நிலையில். ஆனால் இந்த முறை வருமான குறைவு இருந்த படியினால் நான் நினைக்கின்றேன் சபை 08 இலட்சத்தை இழக்கும். ஏனென்றால் அந்தக் காலத்தில் அவர்களுக்கு விதிவிலக்காக செயற்படாத மாதங்களில் கழிவுகள். அது எமக்கு மொத்த வருமானமாக கிட்டத்தட்ட 06 மில்லியன் 02 இலட்சம் மட்டில் வரும். 07 மில்லியன் மீண்டும் அதே விலையில் கொடுப்பது ஒரு வகைக்கு நமக்கு பாதுகாப்பு. உங்களுக்கு மாற்றுக் கருத்துகள் இல்லாவிட்டால் நாம் அந்த வேண்டுகோளை ஆளுநருக்கு அனுப்பி வைத்து அதை செயற்படுத்தலாம். ஆளுநரின் அனுமதி இல்லாமல் நாம் செய்ய இயலாது. ஆனால் சபை அதை தீர்மானிக்க வேண்டும். மாற்றுக் கருத்துகள் இல்லாவிட்டால் அதை ஒருவர் ஆமோதியுங்கள்.

### தீர்மானம் - 04/31/04

கடந்த 2020 இல் ஹிஜ்ரா பொதுச் சந்தை மற்றும் திறந்த வெளிச் சந்தையினை குத்தகைக்கு பெற்றவர் கொரோனா வைரஸ் காரணமாக வியாபார நடவடிக்கைகள் முற்றாக தடை செய்யப்பட்டதனால் அவரின் வருமானம் பாதிக்கப்பட்டது. இதனால் 2021 இலும் திறந்த வெளிச் சந்தையினை அவருக்கு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/31/05

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புகள் வழங்கும் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் வழங்குவதற்காக அப்துல் மஜீட் பொது மண்டபம், ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதி போன்ற இடங்களை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

தேசிய வாசிப்பு மாதம் தொடர்பாக நீங்கள் எல்லோரும் இதனை நன்றாக வாசித்து உள்வாங்கி இருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். 2011 ஆம் ஆண்டில் இருந்து சம்மாந்துறை பிரதேச சபை தேசிய வாசிப்பு மாதத்தை வெற்றிகரமாக செயற்பட்டு சென்ற வருடம் கூட நாம் இதற்கு விருது பெற்றவர்கள். இப் பயணம் தொடர வேண்டும். இந்த முயற்சியில் செயற்திட்டக்குழு ஒன்று இருக்கின்றது. அக் குழு அங்கத்தவர்களோடு ஆகக் குறைந்தது 03 சபை உறுப்பினர்கள் அல்லது எல்லோர் என்றாலும் பரவாயில்லை. இதில் பங்காளிகளாக மாறி இதை வெற்றிகரமாக செய்ய வேண்டும். ஏனென்றால் இது விரிவான திட்டம் இதை பார்த்தீர்கள் என்றால் வீட்டுப் பயிற்செய்கை, உள்நாட்டுக் கைத்தொழில், இறக்குமதி செய்யும் சில விவசாயப் பண்டங்கள் (இஞ்சி, மஞ்சள்) போன்ற பயிர்களை உருவாக்குவதற்கும் நாம் பங்காளிகளாக மாறலாம்.

இதில் விரும்பி இக் குழுவிற்கு அங்கத்தவர்களாக இருந்து செயற்படுவதற்கு யார் யார் முன்னுக்கு வாரீர்கள்? இக் குழுவிற்கு நான் தலைமை தாங்கினாலும் எமது கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். எமது வாசிப்பு மாத நிகழ்ச்சிகளை நூலக பொறுப்பு உத்தியோகத்தர்களுடன் திட்டங்களை வகுத்து நமது எல்லோரின் பங்களிப்போடு இத் திட்டங்களை வகுத்து செயற்படும் போது நிச்சயமாக அந்த அந்த வட்டாரத்தில் மட்டுமல்ல நமது பட்டியல் உறுப்பினர்களும் பங்களித்து இதை சென்ற வருடங்களை விட ஒரு வித்தியாசமான, வெற்றிகரமான முறையில் செயற்படுத்த நீங்கள் பங்களிக்க வேண்டும். மல்வத்தை, வளத்தாப்பிட்டி பகுதியில் நடைபெற இருக்கும் செயற்திட்டங்களுக்கு அப் பகுதியில் உள்ள 03 உறுப்பினர்களும் அதற்கு தலைமை தாங்கி செயற்படுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாங்கள் சுகபோகத்திற்கு சோரம் போனவர்கள். ஆகவே எந்தக் குழுவிலும் என்னை தயவு செய்து உள்வாங்காதீர்கள். உங்களுக்கு விருப்பமானவர்களை அமைத்து உங்களது செயற்பாடுகளை முன்னெடுங்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அக் கருத்தை உள்வாங்கியவனாக, விருப்பம் இல்லாதவர்கள் அதில் ஒதுங்கி இருக்கலாம் பிரச்சினை இல்லை. விருப்பமானவர்கள் செயற்படுத்தலாம். உங்களின் கருத்துகளை நீங்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் போது நிச்சயமாக இதை வெற்றிகரமாக செயற்படுத்தலாம்.

**தீர்மானம் - 04/31/06**
2020 தேசிய வாசிப்பு மாதத்தினை நடாத்துவதற்கான அதற்கெனத் தயாரிக்கப்பட்ட செலவு அறிக்கையினை அனுமதிப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.யூசுப் லெப்பை |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திண்மக் கழிவு சேகரிப்பில் 25Kg மேற்பட்ட தோட்டக் கழிவுகளுக்கும், வியாபார நிறுவனங்களின் கழிவுகளை விசேடமாக சென்று சேகரிப்பதற்கும் கட்டணமாக 01 Kg இற்கு ரூபா 2.50 அறவீடு செய்வது தொடர்பாக, இது நடைமுறையில் இருக்கின்றது. ஆனால் அது தீர்மானமாக எடுக்கப்படவில்லை. சபை தீர்மானமாக எடுத்து செயற்படுத்துவதற்கு சபையின் அங்கீகாரம்.

**தீர்மானம் - 04/31/07**
திண்மக் கழிவு சேகரிப்பில் 25Kg மேற்பட்ட தோட்டக் கழிவுகளுக்கும், வியாபார நிறுவனங்களின் கழிவுகளை விசேடமாக சென்று சேகரிப்பதற்கும் கட்டணமாக 01Kg இற்கு ரூபா 2.50 அறவீடு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/31/08**
எம்மால் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பயளைகளை 25Kg, 10Kg பொதிகளில் பொதியிடுவதற்குத் தேவையான உரப்பைகளை கொள்வனவு செய்வதற்கும், உரப் பொதிகளை தைப்பதற்கான மெசின் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
உரப் பக்கட்கள் நாம் ஒரு குறுகிய சிறிய தொகைக்கு விற்பனை செய்கின்றோம். வெளிக்கடைகளில் அவ் உரப் பக்கட்களின் விலை மும்மடங்காக விற்பனை செய்யப்படுகின்றது.

எனவே நாம் ரூபா 11.00 என்று விற்பதை ரூபா 20.00 ஆக மாற்றினால் என்ன என்பது எனது அபிப்பிராயம். ஏனென்றால் உரத்திற்கு தற்போது நல்ல கிராக்கி இருப்பதனால் காத்தான்குடி, ஏனைய இடங்களில் இருந்து இங்கு இறக்குமதி செய்து ரூபா 60.00, ரூபா 80.00, ரூபா 150.00 இற்கு அப் பக்கட்கள் விற்பனை செய்யப்படுகின்றது. அத்தோடு எமது ஊரில் தென்னை மட்டைகளில் உள்ள தும்பு கூட இங்கு விற்பனை செய்யப்படுகின்றது. எமது ஊழியர்களை பொருத்தமட்டில் அவர்கள் குப்பைகளை ஏற்றும் வரைக்கும் கட்டுகளில் இருந்து அங்கு இங்கு சென்று சல்லடை செய்வதை விட சில இடங்களில் மட்டைகளை எடுத்துச் சென்று எரிக்கின்ற கட்டம் வருகின்றது. அம் மட்டைகளை வெட்டி அதையும் உரத்திற்கு உட்படுத்தி உரத்தின் விலையை கூட்டலாம் என்பது எனது அபிப்பிராயம். அதை ஒரு வரவேற்கத்தக்க விடயமாக நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்றும் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

மட்டைகள் தற்போது சேகரிக்கப்படுகின்றது. நாம் அதை எடுத்து எமது Shredder Pulverizer இயந்திரத்தில் தென்னை மட்டைகளை சேகரித்து பாவிக்கப்படுகின்றது. உரத்தின் விலையை பொருத்தமட்டில் அரசாங்கம் அதை ஊக்குவிக்கின்றது. இப் பகுதியில் எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் அதை ஊக்குவிப்பாக பயளையாக பாவிக்க வேண்டும் என்பதற்காக 1Kg ரூபா 10.00 விலையில் தான் அது விற்கப்படுகின்றது. ஆனால் நாம் மறுபரிசீலனை செய்யலாம். நாம் உதவி ஆணையாளரிடமும் கருத்துகளை கேட்டு ஏனைய சபைகளுடனும் கேட்டு எமக்கு கூட்டலாம் என்று சொன்னால் நிச்சயமாக அதை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் இது இன்னும் இந்த நாட்டில் பாவனைப்படுத்தப்படவில்லை. நாம் தற்போது கூட்டினால் அரசாங்கம் ஒரு பக்கத்தில் அதை பாவிக்க வேண்டாம் என்று சொல்லுகின்றது. அதை நாம் நமக்கு சாதகமாக பாவிக்கின்றோம் என்ற குற்றச்சாட்டும் வரலாம்.

அடுத்த வருடத்தின் வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு ஆரம்ப வேலைகள், உங்களின் கருத்துகள் உள்வாங்கப்பட்டு ஆரம்பிக்க வேண்டும். தயவு செய்து உங்களுக்கு தரப்படும் அந்தப் படிவங்களில் அடுத்த வருடத்திற்கு ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் எப்படியான செலவீனங்கள் செய்யப்பட வேண்டும், வருமானங்கள் எப்படி கூட்டலாம் என்ற கருத்துகளை நீங்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் போது நாம் அதற்கென்று ஒரு செயலமர்வை புறம்பாக வைத்து அது ஒரு பாரிய சவாலாக இருக்கப்போகின்றது. அடுத்த வருடத்தின் வரவு செலவுத் திட்டம் வருமானம் ஏற்படுத்துவதற்கு புதிய வியூகங்களை வகுக்க வேண்டியதாக இருக்கும். அதனால் உங்களின் ஒத்துழைப்பை நாடுகின்றேன்.

அல் முனீர் வித்தியாலயம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். அல் முனீர் வித்தியாலயத்தினை தரம் உயர்த்துவதற்காக தங்களது சிபார்சு வழங்கக் கோரல். அல் முனீர் வித்தியாலயம் தற்போது தரம் 1 தொடக்கம் தரம் 09 வரை 1555 மாணவர்களும் 56 ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவ் வித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் மாணவர்கள் தரம் 10, தரம் 11 இல் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்காக சம்மாந்துறை மத்திய மகாவித்தியாலய தேசிய பாடசாலைக்கு செல்ல வேண்டி இருக்கின்றார்கள். ஆனால் சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் தொகை அதிகமாக இருப்பதால் போதிய வசதிகள் இன்றி எமது பிள்ளைகள் பல கஸ்டங்களையும் பல மன உளைச்சல்களையும் எதிர்நோக்குகின்றனர்.

எமது அல் முனீர் வித்தியாலயத்தில் போதியளவில் பௌதீக வளங்களும் ஆசிரியர்களும் கல்வி நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கான சூழலும் காணப்படுவதனால் தற்போது தரம் 09 இல் கல்வி கற்று வரும் மாணவர்கள் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டில் தரம் 10 கல்வியை தொடரவும், 2022 இல் தரம் 11 கல்வியை தொடரவும் அல் முனீர் வித்தியாலயத்தினை தரம் உயர்த்துமாறு பெற்றோர்களும், பழைய மாணவர் சங்கங்களும், தொழில் சங்க அமைப்புகள், சமூக அமைப்புகள், பாடசாலை அபிவிருத்தி குழு, பள்ளிவாசல்களின் சம்மேளனம் என்பவை தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனவே இவ் வித்தியாலயத்தினை தரம்

உயர்த்துவதற்கு தங்களது சிபார்சுகளை வழங்கி உதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன் என்று அதிபரிடம் இருந்து ஒரு கடிதம் கிடைத்திருக்கின்றது. இதை நாம் சிபார்சு செய்வது சரியா என்ற முடிவுக்கு வருவதற்கு உங்களின் கருத்துகளை வினவுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பிரதேச சபையின் சட்டத்தில் கல்வி அதிகாரத்திற்கு பங்களிப்பு செய்யலாம் என தத்துவம் 19 இல் இருக்கின்றது. நாங்கள் முக்கியமாக இந்த சம்மாந்துறை பிரதேசத்தில் முக்கிய பங்கு எடுக்க வேண்டிய விடயம் சுகாதாரமும், கல்வியும்தான். சுகாதாரத்தை நாங்கள் அடிக்கடி கொஞ்சமாவது தொட்டுச் செல்கின்றோம். ஆனால் கல்வியில் ஒன்று, இரண்டை தவிர கூற முடியாமல் இருக்கின்றது. நாங்கள் கல்விக்கு அல் முனீர் மட்டுமல்ல அல் அமீர் பாடசாலையையும் உயர்த்த வேண்டிய நிலமையில்தான் நாங்கள் இருக்கின்றோம். ஏனென்றால் எங்களுடைய தேசிய பாடசாலையினை எடுத்துக் கொண்டால் அங்கு அவர்கள் அதிகளவு பங்கு எடுப்பது உயர்தரத்தில் ஆகும். சாதாரண தரத்தில் பங்கெடுக்கக் கூடியவர்களாக அல் முனீர் வித்தியாலயமும், அல் அமீர் வித்தியாலயமும் இருக்கும் என நான் நினைக்கின்றேன். அல் முனீர் வித்தியாலயத்திற்கும் வழங்க வேண்டும் அதே போல் அல் அமீர் வித்தியாலயத்திற்கும் நாங்கள் கட்டாயமாக நாங்களாக முன்வந்து அவ் வேலைகளை செய்ய வேண்டும்.

அல் அமீர் வித்தியாலயத்தில் இருக்கின்ற மாணவர்கள் அந்த வட்டாரத்தில் மட்டுமல்ல தூரத்தில் இருந்தும் அம் மாணவர்கள் செல்கின்றார்கள். அந்த மாணவர்கள் தரம் 09 ஆம் ஆண்டு வரைக்கும்தான் அப் பாடசாலையில் இருக்கின்றார்கள். தரம் 09 இற்கு பின்னர் தேசிய பாடசாலைக்கு செல்வது மிகவும் கஸ்டமாக இருக்கின்றது. பிள்ளைகளுக்கு தரம் 09 வரைக்கும் கல்வி கற்றதற்கு பின்னர் தரம் 10, தரம் 11 இனை தரம் 09 இல் படிப்பித்த ஆசிரியர்கள்தான் தரம் 10 உம், தரம் 11 உம் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். அந்தப் பாடசாலையில்தான் அவர்கள் அவர்களுடைய மாணவர்கள் எந்தளவு அவர்களின் அறிவு இருக்கின்றது என்று தரம் 09 இல் படிப்பிக்கின்ற ஆசிரியர்களுக்குதான் மிகவும் முக்கியமான விளக்கம் தெரியும். நாங்கள் தரம் 09 இல் மாணவர்கள் எங்கு கல்வி கற்கின்றார்களோ அப் பாடசாலையில்தான் தரம் 11 உம் கற்க வேண்டும். ஏனென்றால் O/L வினாத்தாள்களை எடுத்துக் கொண்டால் தரம் 09, தரம் 10, தரம் 11 போன்ற 03 தரத்திலும்தான் அவ் வினாத்தாள் இருப்பதால் நாங்கள் இந்த 02 பாடசாலைகளையும் தரம் உயர்த்த வேண்டும்.

அதே போன்று அங்கு கட்டடப் பிரச்சினைகளும் காணப்படுகின்றது. அதற்கும் நாங்கள் எங்களால் செய்ய முடியாவிட்டாலும் எங்களுக்கு மேலாக இருக்கின்ற அதிகாரிகளிடம் கடிதம் அனுப்பி அவைகளையும் நாம் பெற்றுக் கொடுக்க வேண்டும். நான் சென்ற வருடம் எமது வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சென்று கேட்டேன். ஏன் A தரத்திற்குரிய கதிரையில் இருக்க வேண்டிய மாணவர்கள் ஏன் B தரத்தில் இருக்கின்ற கதிரையில் இருக்க வேண்டும்? B தரத்திற்குரிய கதிரையில் இருக்க வேண்டிய மாணவர்கள் ஏன் C தரத்தில் இருக்கின்ற கதிரையில் இருக்க வேண்டும்? என்று கேட்ட போது, அவர் என்னிடம் கூறிய விடயம் 10 வருடங்களாக இக் கல்வி அமைச்சில் இருந்து தளபாடங்கள் வரவில்லை என்று கூறினார். எமது சம்மாந்துறையில் மிகப் பெரிய பிரச்சினை எந்தப் பாடசாலைக்கு சென்று பார்த்தாலும் தளபாடப் பிரச்சினையைத் தான் கூறுகின்றார்கள். எனவே நாங்கள் இந்த தளபாடத்தையும் எங்களது மாகாண சபை ஆளுநரிடம் இருந்து கடிதத்தை அனுப்பி தளபாடத்தையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றேன்.

அதே போன்று இன்னுமொரு விடயத்தை எடுத்துக் கொண்டால் எமது வலயக் கல்வி அலுவலகத்திற்கு புதன் கிழமை சென்று பார்த்தால் வெள்ளைப் புறாக்கள் போல் AD மார்கள் தெரிவார்கள். உண்மையாக அந்த அலுவலகத்தில் மேசை, கதிரை போட்டு வேலை செய்வதற்கு இடம் இல்லை. நூற்றுக்கணக்கான AD மார்களுக்கு கதிரை மேசை இல்லை. நாங்கள் இவற்றை எல்லாம் கவனிக்க வேண்டும். கல்வியில் சரிவு ஏற்படும் என்றால் அதன் அடித்தளத்தில் கையை

வைத்து பார்க்க வேண்டும். கல்விக்கு சரிவு ஏற்படுகின்றது என்றால் பிள்ளைகளை வழிநடத்துபவர்கள் சரியான இடத்தில் இருக்க வேண்டும். அவர்களுக்கு போதியளவான வசதி இருக்க வேண்டும். ஆனால் சம்மாந்துறையில் அவ்வாறான வசதிகள் இல்லை. அதையும் நாங்கள் இந்த சபை ஊடாக எழுத்து மூலம் எழுதி அதையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 04வது சபையின் 31வது அமர்வு அதி விசேடமான புதுப் பொலிவோடு கூடிய அமர்வாக இருக்கின்றது என்பதையிட்டு இந்த சபை சார்பாக நான் எனது எண்ணத்தை வெளிப்படுத்துகின்றேன். இன்று சம்மாந்துறையை பொறுத்தமட்டில் சம்மாந்துறையின் தலைமகனாக இருக்கின்ற கௌரவ தவிசாளர் அவர்கள் சம்மாந்துறையில் கல்வி மட்டுமல்ல சுகாதாரம் மட்டுமல்ல எமது அடிப்படை தேவைகளை வரையறுத்து நிற்கின்ற உள்ளூராட்சி மன்றத்தின் சம்மந்தப்பட்ட வரையறைக்குள் சகல விதமான நடவடிக்கைகளிலும் இன்று தவிசாளராக இருக்கின்ற கௌரவத்திற்குரிய தாங்கள் சகல விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோளாக இருக்கின்றது. ஏனென்றால் இந்த சபையானது இதற்கு முதல் சம்மாந்துறையில் சபையாகத்தான் இருந்தது. இன்று இருந்து இந்த சபை சம்மாந்துறையை தாங்கி நிற்கின்ற வழிநடத்துகின்ற சகல மட்டத்திலும் முற்போக்கோடு செயற்படுகின்ற சபையாக இருக்கும் என நான் கருதுகின்றேன். அதற்கு கௌரவ உறுப்பினர்களாகிய எங்களது எல்லோரினது ஒத்துழைப்பும் தங்களுக்கு நல்கும். அதனை நீங்கள் வழிநடத்த வேண்டும்.

தற்போது முன்வைத்திருக்கின்ற கல்வி சம்மந்தப்பட்ட விடயத்தில் அரசாங்கம் அதிமேதகு ஜனாதிபதியின் உத்தரவின் பெயரில் தேசிய பாடசாலைகள் மேலும் விஸ்தரிக்கப்பட இருக்கின்றது. நான் நினைக்கின்றேன் 1000 தேசிய பாடசாலைகள் நாட்டில் மேலும் ஏற்படுத்தப்பட போகின்றது. சம்மாந்துறையானது மிகவும் விசாலமான பிரதேசத்தை கொண்டிருக்கின்றது. இருக்கின்ற தேசிய பாடசாலை எங்களுக்கு போதாமல் இருக்கின்றது. அல் மர்ஜான் மகளிர் தேசிய பாடசாலை, மத்திய தேசிய பாடசாலை இவை இரண்டும் இருந்தாலும் சம்மாந்துறையின் விசாலத்தை பொருத்தமட்டில் அல் அர்ஷத் வித்தியாலயம், அது போன்று சென்னல் ஸாஹிரா வித்தியாலயம் தேசிய பாடசாலை தரத்திற்கு உயர்த்தப்பட வேண்டும். ஏனென்றால் இன்னும் சில வருடங்களின் பின்னர் இதைப்பற்றி இது சம்மந்தமாக கஸ்டங்களை கூடுதலாக அனுபவிக்க வேண்டி வரும். தற்போது அப் பகுதியில் இருக்கின்ற ஏழை மாணவர்கள் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் தேசிய பாடசாலையை நோக்கி அவர்கள் கல்வி கற்பதற்காக இங்கு வருகின்றனர். அதனால் பல வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். எனவே இந்த சந்தர்ப்பத்தில் எமது சபை சார்பாக, இவ் ஊர் சார்பாக இன்னுமொரு தேசிய பாடசாலை சம்மாந்துறை பிரதேசத்திற்கு நாங்கள் எடுப்பதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அல் முனீர் பாடசாலை சம்மந்தமாக கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களும் குறிப்பிட்டார்கள். உண்மையிலே அப் பாடசாலை தரம் உயர்த்தப்பட வேண்டும். நான் பார்வையிட்ட நேரத்தில் அங்கு இருக்கின்ற பௌதீக நிலை அதாவது ஒரு பாடசாலை என்றால் அப் பாடசாலை மாணவர்களுக்கு உடற்பயிற்சி செய்வதற்காக அல்லது விளையாட்டு பாடங்களை மேற்கொள்வதற்காக எந்தவிதமான ஒரு வசதிகளும் அங்கு இருப்பது காணக்கூடியதாக இல்லை. எனவே அது ஒரு குறைபாடாக இருக்கின்றது. அதே நேரத்தில் பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பது வலயக்கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் ஊடாக பல காரணங்களை முன்வைத்து அதற்குரிய தகுதிகள் இருந்தால் அந்த வலயக் கல்விப் பணிப்பாளர் அப் பாடசாலையை தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என நான் எனது இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கல்வி என்பது ஒரு வரப்பிரசாதம். கல்வியை ஊட்டுவது ஆசான்கள், ஆசான்கள் ஒழுங்காக இருந்தால்தான் எங்கள் மாணவர்கள் ஒவ்வொரு துறைக்கும்

இட்டுச் செல்லலாம். கல்வியோ, சுகாதாரமோ எந்த இடத்தை எடுத்தாலும் ஒரு அதிகாரி இருப்பார். அந்த உயர் அதிகாரிதான் எங்களுக்கு என்ன தேவை என்பதை தேடிக் கொள்வதில் முயல வேண்டும். இந்த உயர் அதிகாரிகள் வந்தவுடனே எங்களுக்கு பதவி கிடைத்து விட்டது நான் இந்த பதவியை வைத்து வருபவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இருந்தாரானால் இவ்வாறான பிரச்சினைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். ஏனென்றால் நான் அண்மையிலே எங்களது சம்மாந்துறை வைத்தியசாலை அதிகாரியை பொருத்தமட்டில் அவர் எங்களுக்கு எதை தேட வேண்டும் என்று தேடிக் கொண்டிருக்கும் ஒருவராகத்தான் இருக்கின்றார். அதே போன்று கல்வியில் இருக்கின்ற ஒரு உயர் அதிகாரி ஏன் இதை தேட இயலாது. நாங்கள் சென்று இப் பிழையை கண்டு பிடிப்பதை விட இவர்கள் எழுத்து மூலம் எங்கு கடிதங்களை வழங்க வேண்டும் என்று வழங்கி எங்களை தொடர்பு கொண்டு இப் பிழைகளை நிவர்த்தி செய்யக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும். எனவே நீங்கள் தவிசாளர் என்ற வகையில் இவ்வாறான அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிக்கைகளை இட்டு எந்தப் பிழை இருக்கிறது, எங்கு என்ன தேவை என்பதை அறிந்து கொள்வது எமக்கு மக்கள் சார்பாகவும் நமது ஊருக்கு செய்ய வேண்டிய சேவையும் ஆகும்.

எமது கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் கூறியது போன்று அல் அர்ஷத் என்பது தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று ஏற்கனவேயும் சொல்லப்பட்டு இருந்தது. எல்லோரும் நினைப்பது என்னவென்றால் அது ஒரு காட்டுப்பள்ளி காட்டில் இருக்கின்றது அதை தரம் உயர்த்த தேவை இல்லை என்று, மலையகப் பகுதியிலே பார்த்தால் காட்டிற்குள் தான் பெரிய பாடசாலைகள் அமைந்திருக்கின்றது. தேசியப் பாடசாலைகளை பார்த்தால் ஒரு மலைப் பிரதேசம். அண்மையிலே நுவரெலியாவுக்கு சென்ற போது 2000 அடி தூரத்தில் அதிலே ஒரு பாடசாலை இருக்கின்றது. அது தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. ஏன் இலங்கையிலே பிரதேச மட்டத்தில் 2வது இடமாக குறிப்பிடப்பட்ட சம்மாந்துறையில் அல் அர்ஷத் பாடசாலை ஆரம்ப காலத்திலே 02 கட்டடங்கள் அமைக்கப்பட்டது. அதில் கல்வி கற்ற ஒருவரில் தான் நான் இவ்விடத்தில் இருக்கின்றேன்.

தற்போது இருக்கின்ற ஆசான்களுக்கு சம்பளத்தை மட்டும் எடுத்தால் போதும், வீட்டுக்கு சென்றால் போதும் என்று ஒரு சிலர் இருப்பதற்கு காரணமும் இந்த தலைமைத்துவ அதிகாரிகளின் வழிநடத்தலும் ஆகும். ஆகவே நாம் இதை கவனத்திற் கொண்டு எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு நடவடிக்கை உலமா சபை, ஏனையவைகள் உள்வாங்கப்பட்டிருக்கின்ற போது நாங்கள் உள்வாங்கப்பட்டு உயர் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகளை வழங்கி குறைபாடுகளை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதும் கட்டடங்களை மட்டும் கட்ட வேண்டும் என்றில்லை கல்வியை உயர்த்தி ஊக்கப்படுத்த வேண்டியவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் எமது கௌரவ உறுப்பினர் சிஹாமா, கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் கதைத்தது போன்று ஸாஹிரா வித்தியாலயமானது அல் அர்ஷத் வித்தியாலயத்திற்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை. எனவே தரம் உயர்த்துவதில் முன்வாங்கப்படவேண்டியது அல் அர்ஷத் வித்தியாலயம் என்பதையும் நான் உங்கள் முன் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அல் முனீர் பாடசாலை தரம் உயர்த்த வேண்டியது கட்டாயத்தின் தேவை. ஏனென்றால் அல் முனீர் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் தொகை கூடுதலாக இருக்கின்றது. கடந்த வருடம் அல் முனீர் பாடசாலையில் 09ம் ஆண்டு வரை கல்வி கற்ற மாணவர்கள் தேசிய பாடசாலைக்கு செல்வதற்கு இரண்டு, மூன்று தடவை அதிபரை சந்தித்து பெற்றோர்கள் மிகவும் ஒரு இழுபறியான நிலையில் இருக்கின்றார்கள். தேசிய பாடசாலையில் இருக்கின்ற அதிபர், எங்களது பாடசாலையில் கட்டட வசதி, தளபாட வசதி இல்லை. அப்படி என்றால் நாங்கள் தகட்டு கொட்டில் அமைத்து தருகின்றோம் அதில் உங்களது பிள்ளைகளை கொண்டு வந்து ஒரு வருடம் படிப்பித்து கட்டடம் கிடைத்த பின்னர் உங்களது பிள்ளைகளை அதில் சேர்க்கலாம் என்று கூறுகின்றார். அப் பிள்ளைகளும் பெற்றோர்களும் கஸ்டப்படுகின்றார்கள். அல் முனீர் பாடசாலை தரம் உயர்த்தப்பட வேண்டியது கட்டாயம். ஏனென்றால் அப் பாடசாலைக்கு அண்மையில் இருக்கின்ற அதிகமான பிள்ளைகள் அந்த பாடசாலைக்குத்தான்

செல்கின்றது. அந்த பிரதேசம் மட்டுமல்ல கல்லரிச்சலில் இருக்கின்ற பிள்ளைகளும் அல் முனீர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியில் இருந்து தரம் 06 வரை கற்கின்ற பிள்ளைகள் இருக்கின்றார்கள். கல்லரிச்சலில் இருந்து வருகின்ற மாணவர்கள் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கின்றார்கள். அப் பிள்ளைகளின் கல்வி அதே பாடசாலையில் O/L வரையும் படித்து A/L இற்கு வெளியில் எந்த பாடசாலையை விரும்பி செல்கின்றார்களோ அது அவர்களின் விருப்பம். ஆனால் O/L வரையும் அதே பாடசாலையில் படிக்க வேண்டும் என்பது அந்த பாடசாலையில் இருக்கின்ற மாணவர்கள் ஒவ்வொருவரினதும் ஆசையாக இருக்கின்றது. அல் முனீர் பாடசாலையை தரம் உயர்த்துவதில் எமது சபை சார்பாக எங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அதுமட்டுமல்லாமல் கொவிட் 19 காலத்தில் பாடசாலை ஆரம்பித்த ஒரு சில தினங்களில் மட்டும்தான் வெப்பமானியை வைத்து பார்த்தார்கள். அதற்கு பின்னர் அது நடைபெறுவதில்லை. அப் பிள்ளைகளுக்கு சுகாதார வசதிகளும் பாடசாலைகளில் நடைபெறுவதில்லை. இதை நான் உங்களது கவனத்திற்கு உள்வாங்கியவனாக விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்கள் பேசும் போது கூறினார்கள் தேசிய பாடசாலைகளிலே இடம் இல்லை என்று, அப் பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டும் அதற்கே இன்னும் வளம் வரவில்லை. அதற்கு ஒரு கட்டமைப்பு இருக்கின்றது. அந்த அமைப்பின் ஊடாகத்தான் சென்றடையலாம். அப் பாடசாலையை சுற்றி மதிலே இல்லாமல் இருக்கின்றது. அம் மதிலை உயர்த்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் எத்தனையோ வருடங்களுக்கு முதல் கட்டப்பட்ட கட்டடம் கட்டி முதல் தட்டே நிறைவடையாமல் இருக்கின்றது. இருக்கின்ற தேசிய பாடசாலைகளை அந்த தரத்திற்கு கொண்டு வர வேண்டும். பாடசாலைகள் என்பது முன்னேற்றப்பட வேண்டும். அதற்கு அமைச்சுகள் இருக்கின்றது. தற்போது பாடசாலையை பன்மடங்காக பிரித்து வைத்திருக்கின்றார்கள். நீங்கள் காட்டுப் பள்ளி என்று கூறவே கூடாது. அது Town பள்ளி என்று கூறலாம். அதன் சுற்றுச் சூழல் மாறுபட்டு இருக்கின்றது. பிரதேச சபை ஒரு மட்டத்திற்குள் தான் இருக்கலாம். அதற்கு அப்பால் செய்வதற்கு வேறு நிறுவனங்கள் இருக்கின்றது, அமைச்சுகளும் இருக்கின்றது.

கல்வியை பல கூறுகளாக பிரித்து பல அமைச்சுகளாக கொடுத்திருக்கின்றார்கள். இன்று கலைப் பட்டதாரிகள் சென்று எந்தவொரு தொழில் வாய்ப்பும் இல்லாமல் போராட்டத்தில் இலட்சக்கணக்கானவர்கள் வேறு வேற கல்வி கூடங்களில் படித்து வேலையேற்றிருக்கின்றார்கள். திறன் அபிவருத்தி அதாவது படித்த மாணவன் தொழிலே இல்லாமல் தொழில் தேடாமல் உள்ள கல்வியைதான் நாம் நாட வேண்டும். VTC, Technical College, SLIATE, விஞ்ஞான பீடம், Research Centre போன்றவை இருக்கின்றது. Research Centre இல் அழகான முறையில் இந்த சபையால் முன்னெடுத்து அதன் வேலைத்திட்டங்களை செய்யலாம். சம்மாந்துறைக்கு என்று நெல்லை உற்பத்தி செய்யலாம். STR என்ற நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய அமைப்பு எம்மிடம் இருக்கின்றது. நாம் அதை செய்யலாம். எமது ஊர் விவசாயத்தை அண்டிய ஊர். விவசாயத்தால் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானியை விட பெரிய அறிவியல் படைத்தவர்கள் இருக்கின்ற ஊரில் Research Centre பெயரளவில் தான் இருக்கின்றது.

காலையில் SLIATE இல் நின்று பார்த்தால் எத்தனையோ பஸ் அயலூர் பிள்ளைகள் வருகின்றார்கள். சம்மாந்துறை மாணவர்கள் எந்தளவு மோசமான அடிமட்ட நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றார்கள் என்பதை சிந்திக்க வேண்டும். அதை சமூகத்தின் ஊடாக பரவலாக பார்க்க வேண்டும். வெறுமனே பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று சொல்வதில் எந்த அர்த்தமும் இல்லை. தரம் உயர்த்தப்பட்ட தேசிய பாடசாலைகளை சென்று பார்த்தால் அதன் நிலமைகள் தெரியும். அதை வளப்படுத்த வேண்டும். அல் முனீர் பாடசாலையை பெருப்பிக்க வேண்டும். அதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள்

இல்லை. ஆனால் தேசிய பாடசாலை சென்ற பிள்ளைகளுக்கு சரியான வாய்ப்பு வசதி இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். அரசாங்கம் நேரடியாக தலையிடுகின்ற பாடசாலைகள்தான் தேசிய பாடசாலைகள். நாங்கள் முயற்சி எடுத்து அமைச்சுகள் ஊடாக எங்களால் முடிந்ததை செய்ய வேண்டும். எமது பிரதேச சபையை வைத்துக் கொண்டு என்ன என்ன வளங்கள் இருக்கின்றதோ அதற்கு உட்பட்ட வளத்தை திறமாக செய்து காட்ட வேண்டும். அதுதான் எங்களது பணி. நாங்கள் எங்களது பணிகளுக்கு அப்பால் செல்கின்ற போது இடர்கள் வருவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே தேசிய பாடசாலை வரவேண்டும், அதற்குரிய மாணவர்கள் தொகை எவ்வளவு என்று தெரிந்திருக்க வேண்டும், அதற்குரிய வளங்கள் என்ன என்று தெரிந்திருக்க வேண்டும். அந்த நேரம் 02 தேசிய பாடசாலைகளை கொண்டு வந்தவர் மர்ஹூம் அப்துல் மஜீட் அவர்கள். அதே போல் இன்று சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் 02 தேசிய பாடசாலைகள் இருக்கின்றது. எனது மிகவும் ஆணித்தரமான கருத்தாக கல்விதான் எங்களது மூச்சு கல்விக்காகத்தான் எங்களது பேச்சு என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு முன்வைக்கப்பட்டிருக்கின்ற பிரேரணை அல் முனீர் வித்தியாலயத்தை தரம் உயர்த்துவது தொடர்பாக, உண்மையிலே ஊரினுடைய ஆரம்ப பகுதியிலே இருந்த பழமை வாய்ந்த பாடசாலை. ஆனால் அதனுடைய வரலாறு என்னவென்று என்னால் கூற முடியாது. பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட வேண்டும் அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துகளும் இல்லை. ஏனென்றால் எமது ஊரில் தற்போது மாணவர்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆனால் இதிலே சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றது. பாடசாலையை தரம் உயர்த்த வேண்டுமானால் முதலிலே அதற்கான வகுப்பறை கட்டடம் தேவை. அதற்கான தளபாடங்கள் அதே போன்று அந்த மாணவர்களுக்கு சரியான கல்வியை கற்றுக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் இருக்க வேண்டும். இவைகள் இருக்கின்றனவா என்பதை நாங்கள் முதலிலே ஆராய வேண்டும். இது சம்மந்தமாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது திட்டமிடல் பணிப்பாளர்களை நாங்கள் முதலிலே அணுகி அவர்களிடம் இப் பாடசாலையை தரம் உயர்த்துவது சம்மந்தமாக நாங்கள் அவ்வாறான முடிவுகளை எடுக்க வேண்டும். அல்லது இவர்களுடைய ஆக்கபூர்வமான கருத்துக்கள் இருக்கின்றதா என்பதை அறிய வேண்டும்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள மாணவர்கள் மட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றார்கள். ஆகவே அந்தப் பாடசாலையில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் இருக்கின்ற போது இதனை தரம் உயர்த்தலாமா என்பது இந்த சபையினால் முடிவு செய்ய இயலாது. அதே போன்று கல்விக்காக கல்வியினை இந்த நாட்டில் மேம்படுத்துவதற்காக அல்லது அபிவிருத்தி செய்வதற்காக அல்லது எங்களது மாணவர்களின் கல்வி நிலைகளை மேற்கொள்வதற்காக இந் நாட்டிலும் மாகாணத்திலும் கல்விக்கு என்று தனியான அமைச்சுக்கள் இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் சரியான முறையிலே பயன்படுத்துவோமாக இருந்தால் இன்று இந் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றத்தின் மூலம் இவைகளை மிக இலகுவாக பெற்றுக்கொள்ளலாம். இது ஒரு சாதாரணமான விடயம். ஏறத்தாள 1989ம் ஆண்டு கௌரவ முதலமைச்சர் வரதராஜா பெருமாள் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைதான் சென்னல் ஸாஹிரா வித்தியாலயம். நான் கூட 11 வருடங்கள் அப் பாடசாலையில் கல்வி கற்றிருந்தேன். மிகவும் வறுமைக் கோட்டுக்கு கீழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசம். ஆனால் அப் பிரதேசத்திலே பாடசாலையை தரம் உயர்த்த வேண்டும் என்பதற்காக உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக மரஹூம் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் காரணமாக முழு இலங்கை நாட்டிலுமே யாராலும் செய்ய முடியாத ஒரே பாடசாலையில் ஒரே நேரத்தில் இரண்டு மாடிக் கட்டடங்களை கட்டி முடித்த சாதனைக்குரிய மகன்.

அவரால் நிலைநாட்டப்பட்ட போது அதனை தரம் உயர்த்துவதற்காக அப் பிரதேசத்து மக்களும் அப் பாடசாலையினுடைய அதிபர் அவர்களும், அப் பாடசாலையில் இருந்த இன்னும் சில ஆசிரியர்களும் எடுத்துக் கொண்ட முயற்சி உண்மையாகவே இன்று வரைக்கும் மறக்க முடியாது. அதே போன்று அப் பாடசாலையில் தரம் உயர்த்தப்பட்ட மாணவர்களுக்கான பௌதீக வசதிகளை

ஏற்படுத்துவதற்காக அந்தப் பாடசாலையினுடைய பெற்றார், ஆசிரியர் சங்கமும் அந்தப் பிரதேச மக்களின் உதவியினாலும்தான் அந்த வகுப்பறைகளுக்கு தேவையான அனைத்து தளபாடங்களும் பெற்றுக் கொடுத்து அல்ஹம்துலில்லாஹ் இன்று 03 திட்டங்களை வகுத்த ஒரு பாடசாலையாக அப் பாடசாலை இயங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே எல்லாவற்றையும் அரச நிதிகள் ஊடாகவோ பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்கின்ற ஒரு சிந்தனையை நாம் மாற்ற வேண்டும். சகல விடயங்களிலும் இந்த ஊரிலே உள்ள மக்கள் அல்லது செல்வந்தர்கள், தனவந்தர்கள் எல்லோரும் பங்காளிகளாக மாற வேண்டும்.

இதற்கான முயற்சியினை அந்தந்த பிரதேசத்திலுள்ள குறிப்பாக அல் முனீர் பாடசாலை இருக்கின்ற அந்த வட்டாரத்திலே 02 அல்லது 03 கௌரவ உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். இவர்கள் சாதாரணமாக ஒரு முயற்சி எடுத்தாலே அப் பாடசாலையினுடைய தேவையை பூர்த்தி செய்ய முடியும். இவர்களுக்காக நாங்கள் பெரிய ஒரு கால நேரத்தை வீணடிக்க வேண்டிய தேவை இல்லை. அதே போல் கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய கௌரவ பிரதித் தவிசாளர் அவர்கள் கூறியவாறு இன்று பெயர்நாமம் பொறிக்கப்பட்ட வகையிலே 02 தேசிய பாடசாலைகள் இருக்கின்றது. ஆனால் தேசிய பாடசாலைக்கான எந்தவிதமான வசதிகளும் அங்கு இல்லை. இந்த ஊரிலே இருக்கின்ற ஏறத்தாள 70% அல்லது 75% இற்கு மேற்பட்ட கல்விமான்கள் கல்வி கற்ற பாடசாலைதான் எங்களுடைய மத்திய மகா வித்தியாலயம் ஆகும். இன்று அப் பாடசாலையினுடைய கல்வி நிலமை அதே போன்றும், அப் பாடசாலையினுடைய சுற்று மதிலினுடைய ஒரு பகுதி இவைகளை எல்லாம் நாம் கூறக்கூடாது. ஆனால் எத்தனையோ பொறியியலாளர்கள், எத்தனையோ வைத்தியர்கள், எத்தனையோ பல்வேறுபட்ட துறை சார்ந்த நிபுணர்களை உருவாக்கிய பாடசாலை ஆகும். எங்களுடைய ஊர் என்ற வகையில் அப் பாடசாலையினுடைய பௌதீக வளத்தை பார்க்கின்ற போது நாங்கள் வெட்டிக் குனிய வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.

அதே போன்றுதான் அண்மையிலே தரம் உயர்த்தப்பட்ட எங்களுடைய அல் மர்ஜான் மகளிர் கல்லூரி. இதுவும் பெயரளவிலே தான் தேசிய பாடசாலையாக இருக்கின்றது. இந்த 02 பாடசாலைகளிலும் இன்று தேசிய பாடசாலை என்ற பெயருக்காக வெளி இடங்களிலே இருந்து மாணவர்கள் கல்வி கற்க வருகின்ற போது இந்த மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கோ அல்லது அவர்களது உயர்தர பெறுபேறுகளை பெறுகின்ற போது இவர்களுடைய வெட்டுப் புள்ளிகளில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வு காரணமாக எமது ஊரைச் சேர்ந்த மாணவர்கள் இந்த இடத்திலே பாதிக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இவற்றுக்கு நாம் என்ன வழி செய்யலாம் என்று முதலிலே ஆராய வேண்டும். அதே போன்றுதான் கல்வி என்று வருகின்ற போது சில விடயங்களை முன்வைக்க நினைக்கின்றேன். இவ் ஊரை பொறுத்தவரையில் இன்று வெளிநிறுவனக் கல்விகள், தனியார் வகுப்புகள் மிகக் கூடுதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அங்கு செல்கின்ற மாணவர்கள் உண்மையிலே எந்த ஒரு ஆசிரியர்களையும் நாங்கள் குறைகூற முடியாது. ஆனால் அந்த தனியார் கல்வி நிறுவனங்களை நடாத்துகின்ற உரிமையாளர்கள் அவர்களுடைய ஒரு குறுகிய இலாப நோக்கை முன்வைத்து கல்வி நிறுவனங்களை நடத்துகின்ற சந்தர்ப்பத்தில் அங்கு கல்வி கற்கச் செல்கின்ற மாணவர்களுக்கு எந்த விதத்திலும் அவர்களுக்கான சரியான முறையிலே அதற்குரிய பௌதீக வளங்கள் அமைக்கப்படவில்லை.

அண்மையிலே நான் என்னுடைய தனிப்பட்ட தேவைக்காக தனியார் கல்வி நிறுவனம் ஒன்று நடைபெறுகின்ற இடத்திற்கு சென்றேன். அங்கு தரம் 06 தொடக்கம் தரம் 12 வரை கல்வி கற்கின்ற ஒரு கல்வி நிறுவனம். ஆனால் ஒரு தரமான பாதுகாப்பான ஒரு மலசலகூடம் இல்லை. இருள் சூழ்ந்த நிலையிலே கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஏறத்தாள நான் நினைக்கின்றேன் 30M நீளமான 05M அகலமான அவ் வகுப்பறை கட்டடத்திலே 03 மின் விளக்குகள் தொங்கப்பட்ட நிலையில் அவர்கள் அக் கல்வியை கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தரமான ஆசிரியர்கள் கற்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆசிரியர்களிடம் கல்வியை கற்க வேண்டும் என்பதற்காக மாணவர்கள் பல சிரமத்திற்கு மத்தியில் கல்வியை கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த சபையினால் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானம்

இருக்கின்றது. அதாவது தனியார் கல்வி நிறுவனங்களை பரிசீலனை செய்து இவர்கள் வகுப்புகளை நடாத்தலாமா இல்லையா என்று, தீர்மானிப்பதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. ஆனால் நான் நினைக்கின்றேன் தற்போது நடைமுறையில் இல்லை என்று, கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களை பணிவாக வேண்டிக் கொள்கின்றேன் இவ்வாறான ஒரு குழுவை அமைத்து முதலில் இந்த தனியார் வகுப்புக்கள் நடாத்துவதற்கு அந்த இடங்கள் பொருத்தமானதா என்பதை அறிந்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி இதற்கான தீர்வினை இம் மண்ணுக்காக பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று உங்களிடம் கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தனியார் வகுப்புகள் நடத்துகின்ற உரிமையாளர்களை எமது சபையில் கௌரவ உறுப்பினர்கள், கௌரவ தவிசாளர் தலைமையில் எடுத்து ஒரு வகுப்பு நடாத்த வேண்டும். கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போல் அப் பிள்ளைகளுக்கு ஒழுங்கான மலசலகூடம் இல்லை. ஆனால் அங்கு படித்துக் கொடுக்கின்ற ஆசிரியர்கள் தரமான ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். அரசாங்க பாடசாலைகளில் படித்துக் கொடுப்பதை விட தனியார் வகுப்புகளில் மிகவும் ஆக்கபூர்வமான முறையில் படித்துக் கொடுக்கின்றார்கள். அங்கு இருக்கின்ற பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இருக்கின்றதா என்று அவர்கள் கூட கவனிக்கின்றார்கள் இல்லை. அவர்கள் வருகின்றார்கள் ஒரு மணித்தியாலய வகுப்பை எடுக்கின்றார்கள். அது முடிந்தவுடன் அவர்கள் சென்றுவிடுவார்கள். வயதிற்கு வந்த பெண் பிள்ளைகள் படிக்கின்றார்கள், வயதிற்கு வந்த ஆண் பிள்ளைகள் படிக்கின்றார்கள் என்று அவர்களுக்கு அது பற்றிய தேவையும் இல்லை, அது பற்றி சம்மந்தமும் இல்லை என்று இருக்கின்றார்கள். அவர்களின் கல்வியை விற்கின்றார்கள், வெளி இறங்கி போகின்றார்கள். இதுதான் தனியார் வகுப்புகளில் நடக்கின்ற பிரச்சினை. அவர்களை எடுத்து உரிய முறையில் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பாடசாலை மாணவர்களைப் பற்றி பேசுகின்ற போது சம்மாந்துறையில் உயர்தரங்கள் படித்து பல்கலைக் கழகம் முடித்து அதே போல் கல்விக் கல்லூரிகளில் கல்வி கற்று மிகவும் திறமையான ஆசிரியர்கள் வெளியூர்களில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். சம்மாந்துறையை பார்த்தோமானால் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50 இற்கு மேற்பட்டவர்கள் வெளியூரவர்கள்தான் கல்வி கற்றுக் கொடுக்கின்றார்கள். ஆனால் நமது ஊரைச் சேர்ந்த நல்ல வளமான ஆசிரியர்கள் நமது ஊருக்கு வரமுடியாமல் உரிய காலம் அதாவது அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட 05 வருடம் முடிந்தும் அவர்களுக்கான இடமாற்றம் செய்ய முடியாத கட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எமக்கு தேவையான ஆசிரியர்கள் இருந்தும் இவர்கள் கல்வி கற்றுக் கொடுக்கின்ற ஏனைய மாவட்டங்களில் இருக்கின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இல்லை என்ற பற்றாக்குறையினால் நமது ஊருக்குரிய ஆசிரியர்கள் வளமான புதிய முறையில் கல்வி கற்றவர்கள் நவீன முறையில் கற்பிக்க பயிற்சி பெற்றவர்கள் வர முடியாமல் தவிர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த ஊரில் அறிந்திருப்பீர்கள் வேறு மாவட்டங்களில் இருந்து இந்த பாடசாலையில் கல்வி கற்றுக் கொடுத்த வகுப்புகள் நடாத்தி சொந்தமாக பணம் அறவிடாமல் ஊரின் நன் நோக்கத்தோடு கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியர்களும் இதே நிலையில் வெளியூர்களில் மறிபட்ட நிலையில் இருக்கின்றார்கள். இதற்கு நமது சபை ஊடாக கௌரவ ஆளுநர் அவர்களுக்கும், கல்வி சார்ந்த செயலாளர் அவர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் கடிதங்களை அனுப்பி நமது ஊருக்கு தேவையான ஆசிரியர்கள் நமது ஊரவர்களை எடுப்பதனால் நமது பிள்ளைகள் கல்வி கற்பதில் கூடுதலான கவனம் செலுத்தப்படும் என்பது எனது கருத்து. அதுமட்டுமல்லாமல் உயர்தரம் படிக்கின்ற மாணவர்கள் சாதாரணமாக இலங்கை அரசாங்கத்திலே கோட்டா முறையில்தான் பல்கலைக்கழகம் செல்லக்கூடியதாக இருக்கின்றது. எமது பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற கோட்டாக்களை வெளியூர் மாணவர்கள் அதை எடுத்துச் செல்வது எமது பகுதிகளுக்கும், எமது சமூகத்திற்கும் அறிந்தும் அறியாமலும் செய்கின்றோம். நீங்கள் அறிந்திருப்பீர்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மிகவும் குறுகிய புள்ளியின் அடிப்படையில் பல்கலைக் கழகம் போகக்கூடிய கல்வியை கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். மாணவர்கள் மிகவும் உச்சகட்டமாக கல்வி கற்று அதி

திறமை சித்தி பெற்றும் சில Point களால் அவர்கள் தள்ளப்படக்கூடிய அசௌகரியமான நிலையில் உள்வாங்கப்படுகின்றார்கள். இதனால் கடந்த காலங்களில் எல்லோரும் அறிந்திருப்பீர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் பார்க்கும் போது பொறியியல் பீடம், மருத்துவ பீடம், கலைப்பீடம், கணக்கியல் பீடம் என்று சித்திபெறுகின்ற போது நமது மாணவர்கள் ஒன்று, இரண்டு புள்ளிகளால் மிகவும் குறைக்கப்பட்டு அவர்கள் பல்கலைக் கழகம் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றார்கள். ஆனால் அந்த வருடத்தில் பல்கலைக் கழகம் சென்ற மாணவர்களை பார்க்கின்ற போது வெளியூர் மாவட்டங்களை சேர்ந்தவர்கள் நமது மாணவர்களின் உரிமைகளை எடுத்துச் செல்கின்றார்கள். இதற்காக எமது சபை ஊடாக ஏனைய சபைகளுக்கும் அறிவிக்க வேண்டும். வெளியூர் மாணவர்கள் கல்வி கற்கக் கூடாது என்பதற்காக சொல்லவில்லை. அவர்கள் குறிப்பிட்ட 05 வருட காலத்திற்குள் சாதாரண தரம் எழுதும் போது அவர்களது பகுதிகளில் சென்று சாதாரண தரம் எழுதிவிட்டு உயர்தரம் படிப்பதற்காக எமது பாடசாலைகளில் சேரமுடியும். அதாவது வெளி மாவட்டங்களில் மாணவர்கள் ஒரு வகுப்பிற்குதான் செல்ல முடியும்.

எனவே கௌரவ தவிசாளர் அவர்களே நமது சபையின் ஊடாக இதற்குரிய முடிவுகள் எடுக்கும் பட்சத்தில் இக் கால கட்டத்தில் படித்துக் கொண்டிருக்கும் உயர்தரங்கள் கற்கின்ற மாணவர்களுக்கு எதிர்காலத்தில் இப்படியானதை அறியாதவர்களாக இருக்கின்றார்கள். இதை அறிந்திருப்பீர்கள் மிகவும் வறுமைக் கோட்டில் இருக்கின்ற பிள்ளைகள் ஒரு சில புள்ளிகளால் அவர்களின் எதிர்காலம் பாதிப்பான, துர்ப்பாக்கிய நிலையில் உள்ளார்கள். இதை கருத்திற் கொண்டு இது சம்மந்தமாக ஏனைய சபைகளுக்கும் எமது முடிவுகளை அனுப்பி இனிவரும் காலங்களிலாவது வெளியூர் மாணவர்கள் கல்வி கற்கின்ற போது சாதாரண தரத்திற்கு முன்னதாக அவர்கள் நிறுத்திவிட்டு அவர்களின் பகுதிக்கு சென்று உயர்தரம் எழுதுவதால் நமது பகுதி மாணவர்களின் கோட்டாக்களை எடுத்துச் செல்ல முடியாது என்பது எனது கருத்தாகும். எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக சபையில் ஒரு முடிவு எடுப்பீர்கள் என்று நினைத்து விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எல்லோரின் கருத்துக்களையும் உள்வாங்கியவனாக, நினைவில் வைக்க வேண்டியவைகள் பல விடயங்கள் ஆனால் முதலாவதாக அல் முனீர் வித்தியாலயத்தை தரம் உயர்த்துவது பற்றிய வேண்டுகோளை உள்வாங்கியவனாக, நான் நமது வலயக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடிவிட்டு நாம் தரம் உயர்த்துவதற்கு அவர் சிபார்சு செய்வது நல்லது என்று உடன்பட்டாரானால் இச் சபையின் சார்பாக உங்களுக்கு விளங்க வேண்டும் சபையின் 19வது சர்த்தின் 19வது பந்தியில் கல்வி சம்மந்தப்பட்ட முறையில் நாம் நேரடியாக தலையிட முடியாது. ஆனால் நாம் நமது கருத்துகளை முன்வைக்கலாம், திட்டங்களை முன்வைக்கலாம், ஊக்குவிப்புகளை செய்யலாம். பாடசாலைகளை தரம் உயர்த்துவது, திறப்பது, மூடுவது, ஒன்றிணைப்பது போன்ற விடயங்களுக்கு நாம் நமது பரிந்துரைகளை செய்யலாம். அதற்கு அமைவாக நாம் அந்த செயற்பாட்டை செயற்படுத்துவதற்கு எனக்கு உங்களின் அங்கீகாரம்.

அத்தோடு இந்த தனியார் வகுப்புகளை பொறுத்தவரையில் இது உண்மையாக கண்கானிக்க வேண்டிய விடயம். சபையினால் ஒரு குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டு சில பரிந்துரைகள் செய்யப்பட்டு இன்று கொவிட் 19 இற்கு பிறகு மீண்டும் அதை பரிசீலிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. நமது பகுதியில் கொவிட் 19 இன் எண்ணமோ ஒருவரிடமும் இல்லை. சாதாரணமாக இருந்ததை விட ஒரு வித்தியாசமான சூழலில் இருக்கின்றது. மிகவும் விரைவாக PHI, தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், கௌரவ உறுப்பினர்கள் சேர்ந்த ஒரு குழுவை உருவாக்கி ஒவ்வொரு வகுப்புகளையும் பரிசீலித்து அவர்களுக்கு தேவைப்பட்டால் இங்கு வரவழைத்து அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கி அந்த உரிய தரத்திற்கு இவ் வகுப்புகள் நடாத்தப்பட வேண்டும். ஏனென்றால் பொதுச் சுகாதார பக்கத்தில் பார்க்கப்போனால் ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு 25 மாணவர்களுக்கும் மலசலகூடம் இருக்க வேண்டும். அதுவும் தற்போது வகுப்புக்கு செல்லும் மாணவர்களில் ஆண் மாணவர்களை விட பெண் மாணவர்கள் அதிகம் ஆகும். அதனால் மலசலகூடம் இன்னும் முக்கியமாகின்றது. அதனால் அதை நாம் செய்ய வேண்டும்.

அடுத்தது ஆசிரியர்களை பொருத்தமட்டில் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போதே இந்தப் பிரச்சினை இருந்தது. நமது பகுதியில் நமது தேவையை விட அப் பாடங்களுக்கு பொருத்தம் இல்லாத ஆசிரியர் தொகை மேலானது. இதைப்பற்றி என்னை விட பிரதித் தவிசாளருக்கு அனுபவம் உண்டு. பாடசாலைகளில் ஆசிரியர்கள் இடமாற்றம் என்கின்ற போது நமது ஊரை சேர்ந்தவர்கள் நமது ஊரில் படிப்பிக்க வேண்டும் என்று நாம் ஆசைப்பட்டாலும் இன்று நமக்கு இருப்பது 02 தேசிய பாடசாலைகள் மத்திய அரசினால் நிர்வகிக்கப்படுகின்றன். ஏனைய பாடசாலைகள் எல்லாம் மாகாண சபைக்குள் வருபவர்கள். மாகாண சபையின் கல்விப் பணிப்பாளரின் கீழ்தான் நடைமுறை செய்யப்படுகின்றது. அதனால் நாம் நமது ஆதங்கங்களை வெளிப்படுத்தலாம், எழுத்து மூலம் சிபார்சுகளை செய்யலாம். ஆனால் இடமாற்றங்கள் வரும் போது அவர்கள் மாகாண சபைக்குரிய திட்டங்களின் அடிப்படையில்தான் அவர்கள் செயற்படுவார்கள். அதில் நாம் திணிக்க முடியாது. வெளிமாவட்டங்களில் இருந்து எமது பாடசாலைகளுக்கு பரீட்சை எழுதும் நோக்கத்தில் படிப்பவர்கள் என்னைப் பொருத்தமட்டில் நமது 02 தேசிய பாடசாலைகளில்தான் அப் பிரச்சினை இருக்கலாம். அந்த அதிபர்களோடு பேசி அதை அந்த முறையில் நாம் தவிர்த்துக் கொள்ளலாம் என்ற விடயத்திற்கு நாம் வரலாம். ஆனால் அல் முனீர் வித்தியாலயம் என்ற விடயத்தில் கல்விப் பணிப்பாளருடன் பேசிவிட்டு அதை செய்யுங்கள் என்று சிபார்சு செய்தால் 19வது சர்த்தின் 19வது பந்திக்கமைய நாம் அதை முன்மொழியலாம்.

### தீர்மானம் - 04/31/09

அல் முனீர் வித்தியாலயத்தை தரம் உயர்த்துவது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடிய பின் சிபார்சுக் கடிதம் வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்கள் மாரி காலத்திற்கு முன் செயற்பட வேண்டிய 03 கட்டுமான வேலைகளுக்கான பரிந்துரைகள் செய்திருக்கின்றார்கள். அதில் ஒன்று கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் தைக்காப்பள்ளி மையவாடியின் எல்லைச்சுவர் அமைத்தல் தொடர்பாக, எமது பகுதிகளில் மையவாடிகள் மையவாடிகளாக பதியப்படாமல் பள்ளிவாசல்களின் பகுதிகளாகவே பதியப்பட்டிருக்கின்றன. அதனால் அப்படியான இடங்களுக்கு நமது சபை நிதியில் இருந்து பெரிதளவு சபை பணங்களை பாவிப்பது நமக்கு சட்ட ரீதியாக ஒரு பிரச்சினை. மின்குமிழ்கள் போடுவது வேறு விடயம் ஆனால் கட்டுமான வேலைகள் செய்வது என்றால் எமக்கு சபை நிதியில் செய்ய முடியாது. அதனால் அந்த வேண்டுகோளை மாகாண சபைகள் மூலம் அல்லது உரிய பணத்தை ஒதுக்கக்கூடிய அமைச்சுகளுக்கு சிபார்சு செய்து எடுக்க முயற்சிக்கலாம்.

### தீர்மானம் - 04/31/10

தைக்காப்பள்ளி மையவாடி எல்லைச் சுவர் அமைப்பது தொடர்பாக மாகாண சபைகள் மூலம் அல்லது பணத்தை ஒதுக்கக்கூடிய அமைச்சுகளுக்கு சிபார்சு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதே போல் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள், உண்மையாக இது தென்னம்பிள்ளை கிராமத்தில் ஒரு பழைய கல்வெட் ஒன்று மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. அதற்கு ஏறத்தாள 07 இலட்சம் மதிப்பீடு ஒன்று செய்யப்பட்டிருக்கின்றது. இதையும் நாம் உள்ளூராட்சி

அமைச்சின் மூலம் அல்லது மாகாண சபை அமைச்சின் மூலம் பெறுவதற்கு முயற்சிகளை எடுத்துவிட்டு அது கைகூடாவிட்டால் மழை ஆரம்பிப்பதற்கு முதல் இந்த சபையின் நிதியில் இருந்து செய்வதற்கு முயற்சிகள் எடுப்போம். அதே போல் எம்.பி குறுக்கு வீதியில் கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ் அவர்கள் அதுவும் ஒரு எஞ்சிய பாதை நான் நினைக்கின்றேன் 681sqm அதற்கு ரூபா 137000.00 செலவாகும். அதையும் அதே முறையில் சபை நிதியங்கள் இடம் தரும் போது அதை செய்வதற்கு ஒரு முயற்சியை எடுப்போம்.

**தீர்மானம் - 04/31/11**

தென்னம்பிள்ளை கிராமத்தில் உள்ள பழைய கல்வெட் மற்றும் எம்.பி குறுக்கு வீதியில் உள்ள எஞ்சிய பாதையினை உள்ளூராட்சி அமைச்சின் மூலம் அல்லது மாகாண சபை அமைச்சின் மூலம் நிதி பெறுவதற்கு முயற்சி எடுத்து, அது கைகூடாவிட்டால் சபை நிதியில் இருந்து செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் என்னோடு உரையாடும் போது இந்த சபையில் பல ஊழியர்கள் நமது அலுவலகத்தில் வேலை இல்லாமல் இருக்கின்றார்கள் என்ற ஒரு கருத்தை முன்வைத்தார். ஆனால் நான் நினைக்கின்றேன் நமக்கு விளங்காமல் இருக்கலாம் எமது அலுவலகத்தில் 06 பட்டதாரி பயிலுனர்கள் இருக்கின்றார்கள். அதே போல் இன்னும் 06 பேர் பயிற்சி காலங்களுக்கு உள்ளவர்களாக இருக்கின்றார்கள். செயலாளரின் கூற்றுப்படி பொறுப்பு இல்லாதவர்கள் அல்லது சுமை குறைந்தவர்கள் இருப்பதாக எனக்கு கூறப்படவில்லை. ஆனால் நிச்சயமாக அவ் விடயத்தையும் உள்வாங்கியவனாக, கௌரவ உப தவிசாளர் அவர்கள் பேசலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஆயிரம் குற்றவாளிகள் தண்டனையில் இருந்து விடுபடலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது அறிஞர் வாக்கு. அதற்கு அமைவாக இந்த சபையில் சென்ற முறை தவிசாளர் தெரிவு நடைபெற்றது. நாங்கள் இந்த சபையில் கௌரவ தவிசாளராகிய உங்களுக்கு எதிராக ஒரு பிரேரணை கொண்டு வந்து உங்களை குற்றங்கண்டு உங்களை பதவி நீக்கிய சபை தேர்வு அல்ல அது. நீங்கள் உங்கள் மனதில் ஏற்பட்ட குறைவின் காரணமாக நீங்களாகவே முன் வந்து இராஜினாமா செய்து எனக்கும் ஒரு வாய்ப்பை உங்கள் ஊடாக பதில் தவிசாளராக இருப்பதற்கு இறைவனும் வழங்கினான். இந்த சபை அமர்வின் படி நாங்கள் உண்மையிலே முதன் முதலாக பிரதித் தவிசாளராக இருந்த போது முதலாவதாக என்னிடம் கேட்கப்பட்ட போது நான் உங்களுக்கு எதிராக I.L.M.மாஹிர் என்று கூறுகின்ற போது எனக்கும் இறைவனுக்கும் தான் தெரியும் என்னுடைய மன உளைச்சல். அது ஒரு புறம் இருக்க, அந்த அமர்வில் ஊரே மும்முரமாக வந்து மீண்டும் தந்ததாக கூறினாலும், அமர்வில் வாக்களித்தவர்கள் 07 பேராக இருந்தாலும் 06 வட்டாரத்தை வென்றவர்கள். ஆனால் கூட்டிக் கழித்து பார்த்தால் வாக்கின் அடிப்படையிலும் அவர்கள் தான் அதிகம் ஆகும்.

நீங்கள் பெயர் குறிப்பிட்டு, உங்களது Photo இனையும் போட்டு கீழே உங்களது பெயரையும் எழுதி ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டு இருந்தீர்கள். இந்த சபையில் கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் வந்தது எனக்கு மிகவும் சந்தோசம். ஏனென்றால் ஒரு உறுப்பினர் இல்லாத நேரம் ஒரு விடயத்தை சொல்வது சபைக்கும் நாகரீகம் இல்லை, எங்களது நடவடிக்கைகளுக்கும் நல்லது இல்லை. சென்ற முறை உங்கள் தேர்வுக்கு உங்களை தெரிவு செய்வதற்கு ஒரு கோடி ரூபா தருகின்றேன் என்று இந்த கௌரவ உறுப்பினர் என்னிடம் கேட்டவர். அது பொய் இல்லை

அவருக்கு நன்றாக தெரியும். மறுக்க இயலாது. எங்களது கட்சி சொன்னதற்காக உங்களுக்கு வாக்களித்தவன் நான். அப்படி இருக்கும் போது சுக போகங்களும் அதாவது எனது 60 வயதிற்கு பிறகு எந்த ஒரு சுகபோகத்தையும் அனுபவிக்கின்றது. பணத்திற்கு சோரம் போனவர்கள், மீண்டும் இவ் ஊர் சிறுமைப்படுத்த வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுமைப்படுத்துபவன் அல்லாஹ் அது உங்களாலும் முடியாது, வேறு எவராலும் முடியாது. அதுமட்டுமல்ல இன்னுமொரு விடயத்தை குறிப்பிட வேண்டும். எப்போதுமே வென்றவர்கள் வெற்றிப் பெருக்கில் இருப்பவர்கள். தோற்றவர்கள்தான் இப்படி அநியாயம் நடந்துவிட்டது என்று துண்டுப்பிரசுரம் வெளியிடுவார்கள். எனது பிள்ளைகள் 03 பேர் பல்கலைக்கழகத்தில் இருக்கின்றார்கள், ஒருவர் தொழில்நுட்பக் கல்லூரியில் இருக்கின்றார். அவர்களிடம் உங்களது தந்தை சுகபோகமும் அனுபவித்து அதாவது பணத்திற்கும் சோரம் போய்விட்டார் என்று கூறினார்கள்.

நான் எனது தனிப்பட்ட முறையில் கூற விரும்புகின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே, எனது வாழ்க்கையிலே 12 வருடம் கல்வியிலே இருக்கின்றேன். ஒரு நாள் கூட பட்டா எடுத்திருக்க மாட்டேன். எத்தனையோ கபூரியா பள்ளிவாசல் ஆரம்பித்ததில் இருந்து நான் இருக்கின்றேன். ஒரு சதக் காசு கூட ஊழல் இல்லை. நான் பொன்னம்பெளி வட்டைக்கு 16 வருடம் தலைவராக இருக்கின்றேன். எனக்கு முதல் இருந்தவர்கள் மரணித்து விட்டார்கள். ஒரு தரம் அக்கரைப்பற்றுக்கு சென்று வந்தால் ரூபா 500.00 போட்டு எடுப்பார்கள். நான் 16 வருடமும் இருந்து ஒரு இலட்சம் மீதியாக இருக்கின்றது. இத் துண்டுப்பிரசுரம் நீங்கள் எழுதி இருந்தால் நானும் மரணிப்பேன், நீங்களும் மரணிப்பீர்கள். மறுமையில் நான் வாக்களிப்பதற்கு முதல் ஏதாவது பங்களிப்பு செய்திருந்தால் உங்களிடம் இருந்து அந்தக் கடனை பெற்றுக் கொள்வதில் எந்த மறுப்பும் இல்லை. ஆனால் மிகவும் மனவருத்தமான விடயம். நீங்கள் அடிக்கடி LED மின்விளக்கு கோருவதில் ஒரு Allergy நான் நன்றாக பார்த்திருக்கின்றேன். உங்களது காலத்திற்குள் செய்யாமல் ஒரு பிள்ளை அடம் பிடித்த மாதிரி அதை செய்வோம் என்று முயற்சி எடுத்தோம். அனைத்து கௌரவ உறுப்பினர்களும் அதற்கு அனுமதித்தார்கள். ஆனால் Digital Board இற்கு 35 இலட்சம் செலவு செய்தோம். உங்களுக்கு எந்த ஒரு எதிர் கேள்வியும் கேட்காமல் நீங்கள் கொண்டு வந்த அனைத்து திட்டத்திற்கும் ஆதரவு அளித்தவர்கள் நாங்கள்.

இந்த சபையில் நான் ஏற்கனவே 2011 ஆம் ஆண்டு SLFP இல் தேர்தல் கேட்டு வந்தவன். நான் இன்னும் அதே கட்சியில்தான் இருக்கின்றேன். நான் எதிரணியில் வந்தும் உங்களுடன் இருந்து எந்தவொரு சபையிலாவது உங்களுக்கு மாற்மாக நான் முகத்திலையே கதைத்து பழக்கப்பட்டவர் கிடையாது. மறுமை இருக்கு அப்படி ஏதாவது சூழ்ச்சி செய்தால் மறுமையில் நானும் மரணிப்பேன் நீங்களும் மரணிப்பீர்கள் கேட்கலாம். இந்த வெள்ளிக் கிழமைக்கு முதல் வெள்ளிக்கிழமை நான் எனது மனதில் ஏற்பட்ட உணர்வு உங்களுக்கு எதிராக எனக்கு தெரியும் கௌரவ உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் இந்த ஊர் நிலமை இப்படித்தான் இருக்கின்றது என்று, நான் மறுப்பு தெரிவிக்காமல் அவர் சொல்வது உண்மை என்று கூறினேன். கௌரவ உறுப்பினர் வந்ததுதான் சந்தோசம். எங்களது கட்சியின் முக்கியஸ்தர்களிடம் கேட்டேன் இப்படி இருக்கு நான் உங்களுக்கு வாக்களிக்கலாமா என்று, அவர் சொன்னார் உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பேன் என்று, நான் வட்டாரத்தில் போட்டியிட்டு வெல்லவில்லை. எங்களது கட்சி தான் இந்த உறுப்புரிமையை தந்தது. உங்களிடம் இருந்த அதே தொகுதி அமைப்பாளர் பதவியை இந்த கட்சிதான் தந்தது. கட்சியின் ஊடாக வந்ததற்காகத்தான் பிரதித் தவிசாளராக இருக்கின்றேன். பதில் தவிசாளராகவும் இருப்பதற்கு அல்லாஹுத்தஆலா நாயகன் எனக்கு வாய்ப்பு அளித்தான்.

ஆனால் நீங்கள் எனது பெயரை குறிப்பிட்டு இப்படி சிறுமைப்படுத்துவதும், பணத்திற்கு சுக போகம் சொன்னதும் ஏனைய உறுப்பினர்களையும் சேர்த்து இதில் குறிப்பிட்டது எனக்கு மிகவும் மனவருத்தமாக இருக்கின்றது. நான் அதிகம் உங்களது முகத்தைப் பாரத்து பேச விரும்பவில்லை. ஏனென்றால் இந்த சபையில் இந்த இடத்தில் இருந்து பேச்சை முடித்துவிட்டு நான் மீண்டும் ஒரு சபையோடு உங்களை சந்தித்து மனக்குறையை தீர்த்து வைத்தவனாக இந்த சபையில் இருந்து நான் வெளிநடப்பு செய்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல் அவர்கள்:**
நாங்கள் அத்தனை பேரும் வெளிநடப்பு செய்கின்றோம். நீங்கள் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
துண்டுப் பிரசுரத்தில் எங்களது பெயர்களை குறிப்பிடாமல் உங்களுக்கு ஆதரித்தவர்களுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கலாம். எங்கள் உடம்புகள் புழுக்கள் நெலிவது போல் மிகவும் சங்கடமாக இருக்கின்றது. அவ்வாறான சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தியதனால் நாங்கள் வந்து சபையில் வெளிநடப்பு செய்வதாக வந்திருந்தோம். இருந்தாலும் சம்மாந்துறையை நாங்கள் நேசிக்கின்றோம், கன்னியப்படுத்துகின்றோம். அதற்கமைவாக இவ்வளவு நேரமும் செவிமடுத்து அத்தனை பிரேரணைகளுக்கும் ஆதரவு வழங்கி இருக்கின்றோம். இருந்தாலும் இதனை கண்டித்து வெளிநடப்பு செய்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வெளிநடப்பு செய்தால் எனது கருத்துகளை உள்வாங்காமல் வெளிநடப்பு செய்வதில் அர்த்தமில்லை. நீங்கள் உங்கள் மன உளைச்சலை கூறினீர்கள். அதற்கு நான் பதில் தருவதற்கு முதல் நீங்கள் வெளிநடப்பு செய்வது என்றால் நான் சொல்வதை இங்கு எஞ்சியிருக்கும் அங்கத்தவர்களுக்கு கூறுகின்றேன். இத் துண்டுப் பிரசுரம் எனது பாணி அல்ல. ஆனால் அன்று இந்த ஊரில் இருந்த நிலவரம் இம் முடிவில் யார் யார் ஆதரவு அளித்தார்கள் யார் யார் எதிர்த்து வாக்களித்தார்கள் என்பதை பிரசுரிக்க வேண்டும். நான் இதில் எவரும் பணத்திற்காக சோரம் போன என்று குறிப்பிடவில்லை. போகாமல் என்றுதான் இந்த சபையில் இருக்கும் அங்கத்தவர்கள் சத்தியக்கடதாசி தருவதற்கும் தயாராக இருக்கின்றார்கள். யார் யார் எந்த அங்கத்தவர்களிடம் சென்று எவ்வளவு பணம் தருவோம் என்று கூறிய சாட்சிகள் இருந்தும் அவைகளைப் பற்றி சொல்லாமல் இது ஊரின் நிலவரம் எனக்கு தெரியும் இந்த சபையில் ஊழியர்கள் கூட நான் மீண்டும் வரக்கூடாது என்று முயற்சி எடுத்தவர்களின் விபரங்கள் கூட எனக்கு தெரியும். யார் யார் எந்த அங்கத்தவர்களுடன் எப்படி பேசினார்கள் என்று, ஆனால் இந்த சபையில் இன்று வரை ஊழியர்களை காப்பாற்றிதான் எந்த செயற்பாடுகளில் இறங்கி இருக்கின்றேன்.

நீங்கள் ஏகமனதாக எனக்கு தரும் முடிவுகளை நான் மிகவும் கவனமாக அந்த முடிவுகளினால் ஊழியர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு கட்டத்தையும் உள்வாங்கி பல கேள்விகள் கேட்டு பல சங்கடங்களை உருவாக்கிதான் செயற்படுத்தி இருக்கின்றேன். எதிலும் சுயநலத்திற்காக எனது பெருமைக்காகவோ நான் அனுபவிக்க வேண்டும் என்று எந்த தீர்மானமும் எடுத்ததும் அல்ல, பறை அடித்ததும் அல்ல. Digital Board செய்யப்பட்டது வருமானத்தை நோக்கி, துரதிஸ்டவசமாக அது செயற்படுத்தும் போது நாம் சில பிழை விட்டதனால் அதைப் பொருத்தி செயற்படுத்துவதற்கு Power காணாமல் போய்விட்டது. அது நமது பிழை. அதில் இருந்து கற்ற பாடம் என்னவென்றால் வாகனத்தை வாங்குவதற்கு முதல் வாகனத்திற்குரிய பெற்றோல் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். Supper Petrol இல்லாவிட்டால் Hybrid வாகனம் வாங்க இயலாது. LED மின்விளக்குகளுக்கு நான் எதிர்ப்பானவன் இன்றும் கூறுகின்றேன். அதை தற்போது செயலில் பார்க்கலாம். இருந்ததை விட இன்று ஊர் இருளில் இருக்கின்றது என்று பல முறைப்பாடுகள் வருகின்றது.

நான் LED இற்கு எதிர்ப்பு என்னவென்றால் LED Single Direction Light அது Torch Light அவ்வளவுக்குள் தான் ஒளி பரவும். அதற்கு அப்பால் பரவாது. அது எவ்வளவு உயருதோ அவ்வளவு வெளிச்சம் தரும். 15 அடிக்கு LED பொருத்தமற்றது. நீங்கள் எல்லோரும் என்னோடு முறண்பட்டு இருப்பீர்கள். ஆனால் நீங்கள் எல்லோரும் சின்னப் பிள்ளைகள் போல் அடம் பிடித்து நானும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. நான் ஊழியர்களை காப்பாற்ற வேண்டும் என்று சில விதிமுறைகளை சொன்னேன். CEB இடம் அனுமதி எடுக்க வேண்டும், வருமானம் 30% தான் எடுத்திருக்கின்றோம். இதை செய்வது என்றால் 100% செலவளிப்பீர்கள் அதற்கு நியாயப்படுத்தல்

செய்ய வேண்டும் என்று கூறினேன். ஆனால் அதை கணக்கெடுக்காமல் அவசரப்பட்டு எப்படியோ இவர் மீண்டும் வந்தாலும் அதற்கு இடையில் பூட்ட வேண்டும் என்று செய்த வேலை. இது நோக்கம் பிழை அதனால் பாதிக்கப்படுபவர்கள் யார்? தீர்மானம் எடுத்தவர்கள் இல்லை. நீங்கள் எல்லோரும் கூறுவீர்கள் மின்விளக்கு பூட்டுவதற்கு கை உயர்த்தினோம். இதை பூட்ட வைத்த செயலாளர், நிதி உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் இவர்கள் தான் மாட்டுவார்கள். ஏனென்றால் நியாயப்படுத்த இயலாது.

இன்றைக்கு கல்வெட் உடைந்திருந்தால் அந்த கல்வெட் திருத்தப்பட வேண்டும். ஏனென்றால் மாரிகாலம் வரப்போகின்றது அதை செய்ய வேண்டும். அது Budget இற்கு மேல் சென்றாலும் அதை நியாயப்படுத்தலாம். ஏன் அது அத்தியவசிய தேவை. உண்மையாக வீதியில் உள்ள எல்லா மின்விளக்குகளும் பழுதாகிவிட்டது என்றால் உடனே மாற்ற வேண்டும். பணம் இல்லாவிட்டாலும் அதை வகை மாற்றலுக்கு நியாயப்படுத்தலாம். ஆனால் எனக்கு ஆசை, நான் சின்னப்பிள்ளை என்றுகொண்டு வந்து அதை கூட்டறிக்கையிலும் பதிவு செய்த பின்னர் அதை ஒழுங்காக நடைமுறைப்படுத்தாவிட்டால் அது அதிகார துஸ்பிரயோகம். இது நேரடியாக அதிகார துஸ்பிரயோகத்திற்கு கொண்டு போகலாம். நீங்கள் என்னோடு எவ்வளவு முரண்பட்டாலும் நான் இக் கதிரையில் இருந்து உங்களையும் காப்பாற்றி, உங்களது கௌரவத்தையும் காப்பாற்றி இந்த சபையில் சம்பளத்திற்கு வேலை செய்கின்ற ஊழியர்களையும் காப்பாற்றுகின்ற கடமை எனக்கு இருக்கின்றது. நான் அரசியல் செய்ய வரவில்லை.

இத் துண்டுப்பிரசுரம் அன்று ஊரில் இருந்த மனோநிலையில்தான் செய்தது. நான் எந்த அங்கத்தவர்களிடமும் தொலைபேசியின் ஊடாக எனக்கு ஆதரவு அளிங்க என்று சொல்லவில்லை. பிரதித் தவிசாளரை தவிர. ஏனென்றால் அவரின் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தவன் நான். அதற்காக அவரிடம் மட்டும்தான் கேட்டேன் வேறு ஒருவரிடமும் கேட்கவில்லை. ஏன் கேட்கவில்லை என்று சொன்னால் நான் இக் கதிரைக்கு வர வேண்டும், ஆசப்பட வேண்டும் என்று இல்லை. என்னுடைய மூதாதையர்களுக்கு ஊர் மக்கள் செய்த கௌரவத்திற்கு நான் அனுபவிக்கும் தண்டனை. அந்த நோக்கத்தில் பார்த்தீர்கள் என்றால் நிச்சயமாக இப்படியான கருத்துகள் கூறப்படமாட்டாது. ஆனால் எவர் வெளிநடப்பு செய்தாலும் ஊர் வெளிநடப்பு செய்யாது. நாம் இந்த சபையின் நடவடிக்கைகளை கௌரவமாகவும், வெற்றிகரமாகவும் கொண்டு போவதற்கு நீங்கள் எல்லோரும் தொடர்ந்தும் பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மீண்டும் இந்த சபைக்கு தவிசாளராக தெரிவு செய்யப்பட்டதற்கு அல்லாஹ்வுக்கு முதற் கண் நன்றி தெரிவித்தவளாக, இன்று எங்களது சபைக்கு உத்தியோகத்தர்களை எடுத்ததற்கு நன்றியை தெரிவித்து ஏன் அவர்களை அழைத்தோம் என்பது அவர்களுக்கு சொல்லப்படவில்லை என்பதையும் நான் கொஞ்சம் பேச விரும்புகின்றேன். கௌரவ உறுப்பினர்களாக இந்த சபைக்கு தெரிவு செய்யப்பட்டு நாங்கள் வந்து சிலரின் எண்ணம் சபையில் பேசிவிட்டு பணத்தை எடுத்து செல்வதுதான் எங்களது கடமை என்று நினைத்து விட்டார்கள். நாங்கள் மக்களுக்காக தெரிவு செய்யப்பட்டு வந்த எங்களுக்கு மக்களின் தேவைகளை, ஏதாவது பிரச்சினைகளை எங்களிடம் முறையிடும் போது நாங்கள் உரிய உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்வதற்கு மிகவும் கஸ்டமாக இருக்கின்றது. நாங்கள் தொடர்பு கொண்டால் எந்தவிதமான பதிலுமே இல்லை. Call எடுத்திருக்கின்றது என்று அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியாது என்றால் அதை எழுத்து மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, நான் 2020.08.31 ஆந் திகதி ஒரு வளவு எல்லை பிரச்சினை காரணமாக தொலைத் தொடர்பு 2.14 இல் இருந்து 4.14 மணி வரை ஏற்படுத்தியும் எவருமே எனக்கு பதில் தராத பட்சத்தில், உள்ளூராட்சி உதவியாளர் திரு.எஸ்.கருணாகரன் அவர்களை கஸ்டத்திற்கு உள்ளாக்கியதற்கு அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவர் பயிற்சி நெறியில் இருந்தவரிடம் தொடர்பு கொண்டு சிரமத்திற்குள்ளாக்கி நான் அந்த காரியத்தை முடித்தேன். ஏன் இந்த உத்தியோகத்தர்கள் தொலைபேசியில் அழைக்கும் போது எடுக்கவில்லை என்றால்

இவர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு என்று அர்த்தமா? இல்லை ஏன் இவர்களுக்கு வேலை செய்ய வேண்டும் என்ற அர்த்தமா? இல்லை இந்த கட்டடப் பகுதிகளில் இவர்கள்தான் முன்நின்று படவரைஞர்களை கொடுத்துவிட்டு நாம் சென்றால் பிரச்சினை என்று அர்த்தமா? இக் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும். நாங்கள் அவ் வட்டாரத்தில் இருந்து ஒரு பிழை நடப்பது என்பதை பார்த்துவிட்டு இருப்பது எங்களால் இருக்க இயலாது. இதை அறிவித்து உரிய உறுப்பினரைப் பற்றி சொல்லப்படுகின்றது. இந்த உறுப்பினர்தான் உங்களுக்கு எதிராக எங்களுக்கு நடவடிக்கை எடுத்து அறிவித்தல் தந்த என்று, நான் உள்நுழையக்கூடாது என்றதற்காக உரிய உத்தியோகத்தர்களை அனுப்பி உரியவரை அனுப்பினாலும் உத்தியோகத்தர்கள் அவ் இடத்தில் இல்லை. ஒரு வெளிக்கள உத்தியோகத்தர் வெளியில் செல்லும் போது ஒரு Advance Programme இல் இந்த இடத்திற்கு செல்கின்றேன் என்று குறிப்பிடப்பட வேண்டும். தொலைத் தொடர்பை ஏற்படுத்தாவிட்டால் அவ் இடத்திலாவது சென்று சந்திப்பதற்கு அல்லது காரியாலயத்தில் எத்தனை மணிக்கு இருப்பேன் என்றாவது இருக்க வேண்டும். இதை முதல் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

நான் வைத்தியசாலையில் இருக்கும் போது எத்தனையோ தேவைக்கு இந்த உத்தியோகத்தர்களுக்கு Call எடுத்தும் இயலாத காரணத்தினால் Whatsapp மூலம் பெயரை இட்டு அறிவித்தேன். ஆனால் மீண்டும் Call எடுத்து நீங்கள் எடுத்த நேரம் வேலையில் இருந்தேன் என்று எந்த பதிலும் இல்லை. இலக்கங்களை மாற்றினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். நாங்கள் இதை அதிகாரப் பரவலாக்க இயலாது. ஒரு செல்வாக்கு மாதிரி ஏதோ அவர்களிடம் பணிந்து போகின்ற மாதிரி கேட்டுக் கொள்கின்றோம். தயவு செய்து ஏதோ இக்கட்டான நிலையில் தொலைத் தொடர்புக்கு பதில் அளிக்க சொல்லுங்கள். கட்டடங்கள் தொடர்பாக ஏற்கனவே சொல்லியிருக்கின்றேன். கட்டடங்கள் உடைப்பதற்கு முதல் நடவடிக்கை எடுங்கள் என்று, தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சென்று எங்களை காட்டிக் கொடுத்து விலகி வரும் போது கட்டடம் திரும்ப ஒரு அனுமதியை பிழையாக கொடுத்து மேல் நடவடிக்கைக்காக கட்டடம் உடைத்தால் இதற்குரிய நட்டத்தை யார் கொடுப்பது. எங்களது சபைதான் கொடுக்க வேண்டும். ஏன் முதல் வருகின்ற பிரச்சினையை இல்லாமல் செய்தால் பின்னர் பிரச்சினை வராது. உண்மையாக கண்ணுக்கு தெரிகின்றது வீதியில் ஒரு வளைவு அந்த வீதியின் விசாலத்திற்கு அங்கால் வாய்க்கால் அந்த வளைவில் ஒரு அனுமதி கொடுக்கலாமா என்பதை பார்க்க வேண்டும்.

எங்களது உத்தியோகத்தர்கள் இதை சட்டப்படி செய்ய இயலாது என்று சொல்ல வேண்டும். அதிகாரத்தை கையில் வைத்துவிட்டு நாங்கள் தலைகுனிவது எதற்காக, உண்மையிலே அரசாங்கத்திடம் பாரம் எடுக்கும் போது நாட்டுக்கு கட்டுப்பட்டவர்களாகவும், மக்களுக்கு கட்டுப்பட்டவர்களாகவும் சத்தியத்தோடு எடுக்கின்றோம். இன்றைக்கு பார்க்கும் போது மன வேதனை நான் இதைப்பற்றி கதைக்கக்கூடாது என்று என்னைப் பற்றிதான் மக்களிடம் தப்பாக பிராயத்தம் கொடுக்கின்றார்கள். பிரதேச சபைதான் இதுக்கு என்றால் பிரதேச சபை பார்க்க வேண்டும் இல்லை என்றால் பிரதேச சபைக்கு முடியாது என்றால் அறிக்கையை தாருங்கள் மேல் அதிகாரிகளிடம் தொடர்பு கொள்கின்றோம். இன்று உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும். இவ்விடத்தில் ஒன்றை கூற வேண்டும் கேள்வியை கேட்டுவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் செல்வதற்கு நாங்கள் பதிலளிக்க தயாராகக் கூடாது என்பதை உறுப்பினர்கள் முன்னிலையில் கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினரின் கருத்துக்களை உள்வாங்கியவனாக, இதில் ஒரு நடைமுறைச் சிக்கலும் இருக்கின்றது. அரச ஊழியர்கள் கையடக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டுமா என்ற ஒரு கேள்வி எழலாம். ஏனென்றால் அது அவர்களின் தனிப்பட்ட இலக்கங்கள் ஆகும். அவர்களை தொடர்பு கொள்வது என்றால் செயலாளர் மூலமாக அல்லது காரியாலய தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ள வேண்டும். நான் ஆரம்பத்திலே இந்த சபையில் கூறிவந்த விடயம் என்னவென்றால் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் வெளிக்கள வேலையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு நாம் உத்தியோகபூர்வமாக தொலை வசதிகள் செய்து கொடுக்க

வேண்டும் என்று, அப்படியானால்தான் நாம் அவர்களை நீங்கள் இதற்கு பதில் தரவில்லை என்று கேட்கலாம். இல்லாவிட்டால் அவர் Field இல் இருக்கும் போது அவர்களை தொடர்புகொள்ள வேண்டியதில்லை. அவர் கூறலாம் இது எனது தனிப்பட்ட இலக்கம் பதில் தர வேண்டிய தேவை இல்லை என்று,

இவ் ஊரை பொருத்தமட்டில் சட்டத்தை மீறும் ஊர் என்ற பெயர் எடுத்திருக்கின்றோம். அதை நிலைகொள்ள இடம் கொடுக்க முடியாது. கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் எனக்கு ஒரு யோசனை தந்தார். அது நான் நினைக்கின்ற மட்டில் செயற்படுத்தலாம். இந்த ஊரை 04 பிரிவுகளாக பிரித்து நாம் நமது பட்டதாரிப் பயிலுனர்கள் அல்லது தகுதி வாய்ந்தவர்களை அனுப்பி சட்ட விரோதமான கட்டடங்கள் எல்லாவற்றுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆவணம் செய்ய துவங்க வேண்டும். இவ் ஊரில் 90% கட்டடங்கள் எந்த அனுமதியும் இல்லாமல் சில நேரம் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்பார்வையிலும் அக் கட்டடங்கள் வரலாம். அவர்களுக்கோ தெரியும் இது சட்டவிரோதமான கட்டடம் என்று, ஆனால் அது கட்டப்படுகின்றது. இதை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். சில கட்டடங்கள் ஆபத்தான முறையில் கட்டப்படுகின்றது.

அதனால் உடனடியாக இதற்கு முதலும் முயற்சிகள் எடுத்திருக்கின்றோம். ஆனால் கௌரவ உறுப்பினர்களும் உங்களுக்கு தெரியும் சங்கடமான விடயம் என்று ஆனால் கௌரவ உறுப்பினர்களும் கண்காணித்து அவ் விடயங்களை எனது அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இது நாட்டின் சட்டம். இந்த அரசின் கீழ் நாட்டின் சட்டத்தை எவராலும் மீற முடியாது. ஒரு நாடு ஒரு சட்டம் சம்மாந்துறைக்கு என்று வித்தியாசமான வீடமைப்பு சட்டம் இருக்க முடியாது. சிலர் சட்ட ரீதியாக அனுமதி எடுக்க முடியாது என்ற எண்ணத்தில் செய்கின்றார்கள். ஆனால் நாம் சட்டத்தை வளைத்தும் அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் நமக்கு முதல் இது சுகாதாரம் பேணி உள்ள விதிமுறைகளுக்குள் அனுமதி வழங்கிய கட்டடமாக வர வேண்டும்.

உதாரணத்திற்கு சென்ற கிழமை ஒருவர் என்னிடம் வந்தார் சேர் நான் ஒரு வளவு வாங்கினேன். அந்த வீதியினை குத்துண்டு கிறுக்கிவிட்டார். உள் வீதியினை வளைத்து எடுக்க சொல்லி, எந்தப் பிரதேசம் என்று நான் கேட்டேன். இது சட்ட விரோதமாக பிரிவினை செய்யப்பட்டு விற்கப்பட்ட காணிகள். உங்களுக்கு தெரியும் 03, 04 மாதமாக எனது வீட்டில் எனக்கு நல்ல கிராக்கி. ஒரு துண்டு காணியை வைத்துவிட்டு அதை பிரிக்கவில்லையா, மொத்தமா கொடுக்கின்றதா என்ற பிரச்சினை. ஏனென்றால் சட்ட ரீதியாக Partition Plan செய்து இந்த Partition செய்கின்ற நேரம் அதற்குரிய கட்டுப்பாடுகள் கொடுக்கப்படும். ஒரு வளவிற்குள் தனியார் ஒழுங்கை போவதை நாம் சென்று குத்துண்டு போகக்கூடாது வளைந்துதான் போக வேண்டும் என்று நாம் சொல்ல இயலாது. ஆனால் இது மக்களுக்கு தெரியாது. ஊருக்குள் சென்றால் நன்றாக படித்த புத்திசாலிகள் நிர்வாக அமைச்சில் பெரிய பதவியில் இருப்பவர்களும் Gate இனை வீதியில் திறக்கின்றார்கள். வீதியோ 15 அடிதான். இதை மாற்றுவதற்கு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அதில் அதிக சர்ச்சைகள் வரும். ஆனால் நிச்சயமாக அம் முயற்சியில் எல்லோரும் ஒத்துழைப்பீர்கள் என்று கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Online வகுப்பிற்காக நூலகத்திற்கு ஒரு TV வழங்கப்பட்டுள்ளது. அந்த TV சென்ற கிழமை சென்று பார்த்த போது பாதுகாப்பற்ற இடத்தில் இருக்கின்றது. ஏனென்றால் ஜன்னல்கள் எல்லாம் வெளிப்படையாகத்தான் இருக்கின்றது. அதாவது கிறில் போட வேண்டும். அதுமட்டுமல்ல போகின்ற இடத்தில் மேசைக்கு மேல் கிட்டத்தட்ட இவ்வருடம் வாசித்த எல்லா பத்திரிகைகளும் அடுக்கப்பட்டு காணப்படுகின்றது. அவற்றை அவ் இடத்தில் இருந்து அகற்ற வேண்டும். அதற்கு நாங்கள் ஒரு Store இனை அமைத்துக் கொடுக்க வேண்டும். சென்ற சபையிலும் நூலகத்தின் மதிலுக்கு வெள்ளை பெயிண்ட் அடிப்பதாக கூறினேன். அதையும் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கிறில் கட்டாயம் செய்ய வேண்டும். உண்மையாக நூலகங்கள் நிர்வாகியை பொறுத்துதான் அதன் சூழல் அமையும். முதல் வெளியூர் பெண் பிள்ளை ஒருவர்தான் இருந்தார். அது ஒழுங்காகத்தான் இருந்தது. சிலர் கடமைக்காக வந்து போகின்றார்கள். இன்றைக்கு பத்திரிகைகள் எல்லாம் E வடிவத்தில் வருகின்றது. E வடிவத்தில் வருகின்ற போது நாம் E – Subscription செய்து அதை ஒவ்வொரு நாளும் Download செய்து வைத்தால் நமக்கு இந்த Physical Paper தேவைப்படாது. இல்லாவிட்டால் Scan செய்துவிட்டு Save செய்து இல்லாமல் ஆக்கலாம். செயலாளர் அவர்கள் அதை கவனத்திற் கொண்டு அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/31/12**

அமீர் அலி நூலகத்தில் உள்ள ஜன்னல்களுக்கு கிறில் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நீண்ட நாள் இடைவெளிக்கு பின்னர் எல்லா சிறுவர் பூங்காக்களையும் சென்ற வெள்ளிக்கிழமை திறந்தோம். அந்த சிறுவர் பூங்கா திறந்த இடத்தில் அமீர் அலி சிறுவர் பூங்கா திறப்பதற்காக சென்றிருந்தேன். அங்கு கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களும் வந்திருந்தார்கள். அந்த சிறுவர் பூங்காவை பராமரிப்பவர் கண்டும் காணாத விதமாக அந்த சிறுவர் பூங்காக்களை பராமரித்து வருகின்றார். அதில் இருக்கின்ற ஒரு பூச்செடிகூட பராமரிக்கப்படவில்லை. கைகாட்டி சிறுவர் பூங்காவிற்கும், இந்த சிறுவர் பூங்காவிற்கும் இவ்வளவு வித்தியாசம் இருக்கின்றது என்றும் கைகாட்டி சிறுவர் பூங்காவை பராமரிப்பவர் மிகவும் அழகான முறையில் பராமரித்து வருகின்றார் ஏன் உங்களுக்கு செய்ய இயலாது என்று கேட்டவுடன், அவரிடம் இருந்து வந்த பதில் வீதியோரங்களில் இருக்கின்ற கம்பி வேலிகள் பணிவாக இருக்கின்றது. அதனால் மரக் கன்றுகளை பராமரிப்பது கஸ்டமாக இருக்கின்றது இதை உயர்த்தி தாருங்கள் என்று கேட்டார்.

அமீர் அலி சிறுவர் பூங்கா சம்மாந்துறையின் மையத்தில் இருக்கின்றது. எல்லா ஊரவர்களும் அதில் தங்கி இருந்து தாமதமாகி பிள்ளைகளை விளையாட விட்டு எடுத்துச் செல்கின்றார்கள். எமது ஊரில் உள் இருக்கின்ற சிறுவர் பூங்காக்கள் மிகவும் அழகாக பராமரித்து வருகின்ற சந்தர்ப்பத்தில் ஏன் இந்த சிறுவர் பூங்காவை பராமரிப்பதற்கு ஊழியர்களுக்கு இயலாமல் இருக்கின்றது. அந்த ஊழியர்களுக்கு ஒழுங்காக பராமரித்து வர வேண்டும் என்று சொல்ல வேண்டும் அல்லது அவ் ஊழியர்களை இடமாற்றம் செய்து பராமரிக்கக் கூடிய ஊழியரை சிறுவர் பூங்காவிற்கு எடுக்க வேண்டும். சிறுவர் பூங்காவில் பராமரிப்பதற்கு கொட்டில் அமைத்து கொடுத்து அவர்கள் இருந்து பார்க்கக் கூடியது போல் செய்ய வேண்டும். கல்லரிச்சல் சிறுவர் பூங்காவில் நிலம் சிறுவர்கள் விளையாடுவதற்கு வசதி இல்லாத கிறவல் நிலமாக இருக்கின்றது. சிறுவர்களுக்கு பாதுகாப்பான வசதி செய்து கொடுத்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கைகாட்டி சிறுவர் பூங்காவை பராமரிப்பவருக்கு பாராட்டு தெரிவித்து அவரை கௌரவப்படுத்த வேண்டும்.

**தீர்மானம் - 04/31/13**

அமீர் அலி, கல்லறிச்சல், கைகாட்டி, மல்வத்தை ஆகிய சிறுவர் பூங்காக்களில் பாதுகாப்பு கொட்டில் அமைப்பதற்கும், மற்றும் கல்லறிச்சல் சிறுவர் பூங்காவிற்கு மணல் இடுவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபையில் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராக உள்ளேன். இந்த சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக உள்ள 04 அங்கத்தவர்களும் கடந்த தவிசாளர் தெரிவின் போது உப தவிசாளர் உட்பட 03 பேர் தவிசாளரை எதிர்த்து வாக்களித்தார்கள். நான் தவிசாளரை ஆதரித்து வாக்களித்தேன். ஆனால் கௌரவ உப தவிசாளர் அவர்கள் கட்சியின் தீர்மானம் என்று இவ்விடத்தில் கூறினார். ஆனால் கட்சியின் தீர்மானமாக இருந்தால் அவர் இந்த இடத்தில் இருந்து வெளியிறங்கி இருக்கக் கூடாது. ஏனென்றால் கட்சி தீர்மானப்படி அவர் கட்சியால் ஆதரிக்க சொன்ன ஒருவரை ஆதரித்தவர் ஏனைய விடயங்களில் வரக்கூடிய பிரச்சினைக்கு அவர் காரணம் என்று சொல்லமுடியாது. அவர் இந்த சபையில் இருந்து கட்சியின் தீர்மானப்படி வாக்களித்தது என்றால் கட்சியின் பெயரையே நிறைவேற்றி உள்ளார். எனவே ஏனைய பிரச்சினைகளுக்கு அவர் முகங்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் கட்சியின் தீர்மானத்தை நிறைவேற்றினவர் என்று நினைத்து செயற்பட்டிருந்தால் இந்த சபையில் அவர் இருந்து கட்சியையும் அவர் சார்பாக வாக்களித்த உறுப்பினர்களையும் அவர் கௌரவித்திருக்க வேண்டும். அவர் எந்தவித முடிவும் இல்லாமல் இந்த இடத்தில் இருந்து வெளியேறிச் சென்றதை நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக வன்மையாக கண்டிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர்வருகின்ற வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மல்வத்தை பொதுநூலகத்தை திறப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். முதலாம் திகதி திறப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளோம். அங்கு பல வளப் பற்றாக்குறை இருக்கின்றது. மேசைகள், கதிரைகள் இல்லை. அதுமட்டுமல்லாமல் புத்தகங்கள் பழமை வாய்ந்த புத்தகங்களாக காணப்படுகின்றது. அப் புத்தகங்கள் தற்போதய மாணவர்களுக்கு உகந்ததாக இல்லை. அப் புத்தகங்களையும் வழங்கி சிறப்பான முறையில் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அது புதிதாக திறப்பதில்லையே. பின்னர் தற்போதுதான் மல்வத்தையில் நூலகம் திறக்கின்றார்கள் என்று வரும். அமைச்சினால் தளபாடங்களும், புத்தகங்களும் கொடுப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவாளர் ஒருவர் என்னிடம் கதைத்து நான் அமைச்சருக்கு முக்கியமாக மல்வத்தை, வீரமுனை நூலகங்களுக்கு தளபாடங்களும் புத்தகங்களும் கேட்டு கடிதம் சென்ற கிழமை அனுப்பி வைத்திருக்கின்றேன். ஆனால் நிச்சயமாக இடமாற்றி இருக்கும் வாசகசாலையை, வாசகசாலைக்கு அப்பால் ஒரு பொது சந்திப்பு இடமாக மாற்ற வேண்டும். அதற்குரிய வளங்கள் இருக்கின்றது. Bench அமைத்து மரங்களை நாட்டி செய்தால்தான் அவ் இடத்தை உயிர்ப்பிக்கலாம். இதற்குரிய நடவடிக்கையை எடுப்போம்.

**தீர்மானம் - 04/31/14**

மல்வத்தை பொது நூலகத்திற்கு தேவையான தளபாடங்கள், புத்தகங்கள், Bench கொள்வனவு செய்தல் மற்றும் சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு முதியோர் கௌரவிப்பினை நடாத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற சபையில் SP19 இல் வாசிப்பு நிலையம் செய்வது என்று கூறினோம். அது விடயங்களாக என்ன நடைபெற்றது என்று கூறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
MPCS புத்திசாலித்தனமாக நமக்கு எழுதியிருக்கின்றது எப்படி என்றால் அவ்விடத்தை பெயிண்ட் அடித்து மற்றவர்களிடமும் விலைமனு கோரி உங்களுக்கு தருவதைப் பற்றி பரிசீலிக்கின்றோம் என்று, இதை நான் DS உடனும், Co-operative Commission உடனும் பேசினேன். இது ஒரு ஊர்ப் பிரச்சினை என்ற படியினால் ஒரு நிறுவனத்தை பராமரிக்கும் சொத்து ஆகும். அது அரச காணியாக இருந்தாலும் இருக்கின்ற கட்டடம் Co-operative இற்குரியது. இதை எப்படி சட்டபூர்வமாக அவர்களுக்கும் நட்டம் ஏற்படாமல் எவ்வாறு பிரதேச சபையின் சொத்தாக மாற்ற முடியும் என்ற ஆலோசனையை கேட்டிருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் 10ம் மாத முடிவுக்குள் ஒரு தீர்மானத்திற்கு வரலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விளினியடி 08ம் வீதியில் அமைந்திருக்கும் அரபா வித்தியாலயத்திற்கு செல்லும் பாதையில் உள்ள கல்வெட்டில் உள்ள பாலம் உடைந்துள்ளது. இதைப் பற்றி முதலும் கூறியிருக்கின்றேன். தற்போது பார்க்கும் போது பெரிய ஒரு குழியாக இருக்கின்றது. பிள்ளைகள் ஓடிவரும் போது தவறுதலாக அதற்குள் விழலாம். அதை மிக விரைவில் திருத்தி அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதன் பிரச்சினை என்னவென்றால் நானும் இன்று காலையில் ஒரு ஜனாசாவை பார்க்க சென்ற போது ஒரு ஆபத்தான இடம் அதை சரியாக அவதானித்து வர வேண்டும். அது பழமையான கல்வெட் ஆகும். அதை எடுப்பது என்றால் 05,06 இலட்சம் தேவைப்படும். ஆனால் அதற்குரிய அறிவுறுத்தலை கொடுத்து விடடேன். இன்ஷா அல்லாஹ் அதை கட்டாயமாக செய்ய வேண்டும்.

**தீர்மானம் - 04/31/15**
அரபா வித்தியாலய பாடசாலை வீதியில் உள்ள கல்வெட்டினை திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த கூட்டத்தில் நில அளவை சம்மந்தமாக கூறினேன். சம்மாந்துறையின் அனேகமான பிரதேசங்களில் செய்யப்பட்டுள்ளது. இப் பிரதேசம் மாத்திரம் ஏதோ காரணத்தினால் விடுபட்டிருக்கின்றது அல்லது புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. எனவே இதனை மேற்கொள்வதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன். அந்த செயற்பாடு எந்தளவில் நடைபெற்றிருக்கின்றது என்று தெரியாமல் இருக்கின்றது. நீங்கள் ஒரு சுற்று நிருபத்தை கூறினீர்கள். உத்தியோகபூர்வமான ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்ற நிலங்களுக்கு வழங்கப்பட இருப்பதாக, எனவே அதற்கு முதல் நில அளவை செய்யப்பட்டால்தான் அப் பிரதேச மக்கள் கடைசி சந்தர்ப்பத்திலாவது அவர்களது இடங்களுக்கு உத்தியோகபூர்வமான ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். அதற்குரிய நடவடிக்கை எந்தளவில் இருக்கின்றது என்பதை தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இப் பகுதியில் எந்த சபையிலும் நம்மிடம் இருக்கும் ஆவணங்கள் இருப்பதாக நான் அறியவில்லை. நாம் இந்த ஊரில் ஏறத்தாள 285 இற்கு மேற்பட்ட Cadastral Map நில அளவை திணைக்களத்தில் இருந்து வாங்கி வைத்திருக்கின்றோம். நான் தவிசாளராக இல்லாத 20 நாட்களுக்குள் இப் பிரச்சினை எனக்கு நில அளவைத் திணைக்களத்தில் இருந்து நமது ஊரைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் எனக்கு அறிவித்ததனால் நான் கௌரவ உறுப்பினர் என்ற ரீதியில் நில அளவை திணைக்களத்திற்கு சென்று தற்போது இருக்கும் Surveyor Superintendant உடன் கதைத்து இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இவ் வருடத்திற்குள் எஞ்சியிருக்கும் பகுதிகளை ஏனென்றால் சம்மாந்துறைக்கு என்று ஒரு படம் இல்லை. அதை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். இக் கிழமை உத்தியோகபூர்வமாக அவருக்கு தவிசாளர் என்ற ரீதியில் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்க இருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் இறைவன் நாட்டப்படி இவ் வருட இறுதிக்குள் அவ் வேலைகள் பூர்த்தி செய்யப்படலாம். ஏனென்றால் பிரதேச செயலகம் கொடுக்கின்ற Priority படிதான் செய்கின்றார்கள். பிரச்சினை இல்லாத இடங்களில் முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. ஏனைய இடங்கள் செய்யப்பட்டுள்ளது. பிரச்சினை குறைவான பிரதேசம் என்ற படியினால் விடுபட்டுள்ளது. இதை உடனடியாக செய்து முடிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை கௌரவ உறுப்பினராக முன்வைத்தேன். உத்தியோகபூர்வமாக இக் கிழமைக்குள் அதை செய்வதற்கு முயற்சி எடுப்பேன் என்று கூறி, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.